
சின்னஞ்சிறு
கதைகள்!
K.R

# சின்னஞ்சிறு கதைகள்

தொகுப்பு - திருமயம்
பெ.பாண்டியன்

pandianp78p@gmail.com

**மின்னூல் வெளியீடு :**

**http://FreeTamilEbooks.com**

உரிமை - CC-BY-SA-NC கிரியேடிவ் காமென்ஸ். எல்லாரும் படிக்கலாம், பகிரலாம்.

பதிவிறக்கம் செய்ய - http://FreeTamilEbooks.com/ebooks/chinnajchiru_kadhaigal

அட்டைப்படம் - -- - --

மின்னூலாக்கம் - ஐஸ்வர்யா லெனின் - aishushanmugam09@gmail.com

கணியம் அறக்கட்டளை

(kaniyam.com/foundation)

This Book was produced using LaTeX + Pandoc

# மின்னூல் வெளியீடு

மின்னூல் வெளியீட்டாளர்: http://freetamilebooks.com

அட்டைப்படம்: – மின்னூலாக்கம்: ஐஸ்வர்யா லெனின் - aishushanmugam09@gmail.com

மின்னூலாக்க செயற்திட்டம்: கணியம் அறக்கட்டளை - kaniyam.com/foundation

# Ebook Publication

Ebook Publisher: http://freetamilebooks.com

Cover Image: –

Ebook Creation: Iswarya Lenin - aishushanmugam09@gmail.com

Ebook Project: Kaniyam Foundation - kaniyam.com/foundation

# பொருளடக்கம்

அச்சுப்பதிப்பு . . . . . . . . . . . . . . 12
அணிந்துரை . . . . . . . . . . . . . . 14
வாழ்த்துரை . . . . . . . . . . . . . . . 19
பதிப்புரை . . . . . . . . . . . . . . . . 23
1. கும்பகோணம் கயத்தை சத்யா . . . . . 25
2. ஈரோடு க.ரவீந்திரன் . . . . . . . . . . 27
3. புதூர் பாலா . . . . . . . . . . . . . . . 29
4. சென்னை கே. அசோகன் . . . . . . . . 31
5. தஞ்சாவூர் எஸ்.இராஜேந்திரன் . . . . . 32
6. சென்னை மலர்மதி . . . . . . . . . . . 34
7. இராமநாதபுரம் எம்.கல்லூரி ராமன் . . 36
8. வேலூர் மூ. மோகன் . . . . . . . . . . 38
9. வீ.வைகை சுரேஷ் . . . . . . . . . . . . 40
10. சென்னை சின்னஞ்சிறுகோபு . . . . . . 41
11. திருப்பூர் சாரதி . . . . . . . . . . . . . 44
12. நெய்வேலி கி.ரவிக்குமார் . . . . . . . . 47
13. கேரளா சி. ஆர். ஹரிஹரன் . . . . . . . 49

14. கிருஷ்ணகிரி இரா.வசந்தராசன் . . . . 51
15. இரா.இரவிக்குமார் . . . . . . . . . . . 53
16. புது டெல்லி ஆர். ஹரிகோபி . . . . . . 55
17. மேல்மங்கலம் பத்ரா (ஆர். ராகவன்) . . 57
18. முனைவர் கரு. செந்தில்குமார், கோவை 59
19. திருச்சிற்றம்பலம் சுரேஷ் . . . . . . . . 61
20. சென்னை ஆனந்த் சீனிவாசன் . . . . 63
21. தஞ்சாவூர் ரிஷிவந்தியா . . . . . . . . 66
22. தருமபுரி வெ.சென்னப்பன் . . . . . . . 67
23. சித்தோடு கமலக்கண்ணன்.இரா . . . 68
24. அஜித் . . . . . . . . . . . . . . . . . 69
25. திருச்சி அ.வேளாங்கண்ணி . . . . . . 71
26. தர்மபுரி மு.மதிவாணன் . . . . . . . . 72
27. திருநெல்வேலி ஏ.ஜி.முகம்மது தெளபீக் 74
28. தஞ்சாவூர் வளர்மதி ஆசைத்தம்பி . . . 76
29. தஞ்சாவூர் தே. ராஜாசிங் ஜெயக்குமார் 79
30. திருநெல்வேலி கல்லிடை வெங்கட் . . 81
31. நாகை தங்க.நாகேந்திரன் . . . . . . . 83

32. கடலூர் தேன்ராஜா . . . . . . . . . . . . . 84
33. கிருஷ்ணகிரி மு.குமரன் . . . . . . . . . . 87
34. திருவாரூர் கீழை அ.கதிர்வேல் . . . . . . 89
35. கரியமாணிக்கம் சோழா புகழேந்தி . . 91
36. சென்னை பி. பழனி . . . . . . . . . . . . 93
37. பொறையார் சரஸ்வதி செந்தில் . . . . 98
38. வேதாரண்யம் மருத.வடுகநாதன் . . . 100
39. காசாங்காடு வீ காசிநாதன் . . . . . . . . 102
40. நத்தம் எஸ்.சுரேஷ்பாபு . . . . . . . . . . 104
41. வேம்பார் மு.க.இப்ராஹிம் . . . . . . . . 108
42. கோவை. நா.கி.பிரசாத் . . . . . . . . . . 110
43. மடிப்பாக்கம் லட்சுமி ஆவுடைநாயகம் . 112
44. தஞ்சாவூர் அய்யாறு ச.புகழேந்தி . . . . 114
45. திருச்சி ப்ரணா . . . . . . . . . . . . . . 116
46. திருச்சி கு.வைரச்சந்திரன் . . . . . . . . 118
47. சென்னை என்.கே.பாலசுப்ரமணியன் . 120
48. வேதாரண்யம் ந.விஜய்ஆனந்த் . . . . 123
49. மதுரை முருகேசன் . . . . . . . . . . . . . 125

50. தஞ்சாவூர் ராம்ஆதிநாராயணன் . . . . 126
51. இடைப்பாடி ஜெ. மாணிக்கவாசகம் . . 128
52. தூத்துக்குடி ஜெரி. .டார்வி . . . . . . . . 130
53. வேலூார் எல். மாறன் . . . . . . . . . . . 131
54. செ.புதூர் எல்.இரவி . . . . . . . . . . . 132
55. நீடூர் அ.முஹம்மது நிஜாமுத்தீன் . . . . 135
56. தக்கலை லீலாராம் . . . . . . . . . . . 137
57. கிருஷ்ணகிரி ப. கோபி . . . . . . . . . 139
58. நந்து சுந்து . . . . . . . . . . . . . . . 140
59. கள்ளக்குறிச்சி க. கோகுல பிரகாஷ் . . 142
60. தருமபுரி ஆதி. சௌந்தரராஜன் . . . . 144
61. திருச்சி சி.ஸ்ரீரங்கம் . . . . . . . . . . . 146
62. திருவண்ணாமலை ந.சண்முகம் . . . . 147
63. நெய்வேலி சுப்ரமணியபாண்டியன் . . 149
64. மதுரை ரகுநாத் வ . . . . . . . . . . . 151
65. சங்கராபுரம் ச.மணிவண்ணன் . . . . . 153
66. கோவை புதியவன் . . . . . . . . . . . 155

67. மயிலாடுதுறை கவிஞர் லிடியா இம்மானுவேல் . . . . . . . . . . . . . . . 156
68. தஞ்சாவூர் பா து பிரகாஷ் . . . . . . . . . . 158
69. திருப்பூர் வைகை. ஆறுமுகம் . . . . . . . 161
70. திருமயம் பெ.பாண்டியன் . . . . . . . . 163
கணியம் அறக்கட்டளை . . . . . . . . . . 164

# அச்சுப்பதிப்பு

சின்னஞ்சிறு கதைகள்

- வகை குறுங்கதைகள்
- உரிமை  - ஆசிரியருக்கு
- முதல் அச்சுப் பதிப்பு - செப்டம்பர் 2024
- வடிவமைப்பு | அச்சாக்கம் - சன் கிரியேசன்ஸ், காரைக்குடி–630 003
  அலைபேசி : 9578078500
- வெளியீடு - பாண்டியன் - வைகை பதிப்பகம்
  பிளாட் எண். 102, செல்லப்பா நகர்
  கழனிவாசல், காரைக்குடி - 630 002
  அலைபேசி : 9942847919 / 9688303124

- விலை - Rs.150/-

# அணிந்துரை



...

முனைவர் S.ஜான்சன் ஜெயக்குமார்

முதல்வர்

டி.பி.எம்.எல்.கல்லூரி

பொறையார்

தொன்மை இலக்கியத்தில் திருக்குறளும், அண்மை இலக்கியத்தில் ஹைகூ கவிதைகளும் ஆற்றி வரும் சுருங்கச்சொல்லி விளங்க வைத்தல் கண்டு உள்ளம் மகிழ்கிறது; உணர்வுகள் சிறகடித்து பறக்கிறது.... மினிமலிசம் என்கிற புதிய

வகை மனப்பாங்கு உலகமெங்கும் வியாபித்து வரும் இந்நாளில் எதையும் மிக சுருக்கமாக கூறி விளங்க வைத்தல், விவரித்தல், வெளிப்படுத்துதல் என்பது ஒரு கலையாக மாறி வருகிறது. காணொளியாகட்டும், ஓவியங்களாகட்டும், கவிதைகளாகட்டும், கடிதங்களாகட்டும், கதைகள் கூட இப்பொழுது அந்த கோட்பாட்டுக்குள் கடந்து வருவதை பார்க்கிறேன். அந்த வகையில் மின்னல் கதைகளாக மின்னி மகிழ்விக்கும் இந்த சின்னஞ்சிறு கதைகள் என்ற நூலுக்கு அணிந்துரை வழங்குவதில் பெருமிதம் கொள்கிறேன்.

இப்படி ஒரு இலக்கிய வகையினை எத்தனை பேர் அறிந்து இருப்பார்கள் என்ற எண்ணத்தோடு இந்நூலை படிக்கும் போது 80க்கும் மேற்பட்டவர்கள் இதில் பங்களிப்பு செய்திருப்பதை கண்டு வியந்து போனேன்.

பலரை இந்த படைப்பில் பங்களிப்பு செய்ய வைத்திருப்பதன் மூலம் இந்த படைப்பின் தரத்தை மிக உயர்த்தி பலருக்கும் பயன்படும் வண்ணம் மாற்றி இருக்கிறார் எழுத்தாளர் திருமயம் பெ. பாண்டியன் அவர்கள். மிக அழகாக தொகுக்கப்பட்டிருக்கிற இந்த சின்னஞ்சிறு மின்னல் கதைகளில், மனித பண்புகள், சமூக சூழல்கள், அரசியல் நையாண்டி, அவலச்சுவை, நகைச்சுவை, காதல், கல்வி, கடமையுணர்வு, பெற்றோரை பேணுதல், அறம் முதலிய வாழ்வியல் நுட்பங்களும், உணர்வுகளும் கதைகளில் உள்ளார்ந்து வெளிப்படுகிறது. சில கதைகள் நம்மை சிரித்து கடந்து போக சொல்கிறது. சில கதைகள் நம் மனதை உருக்கி மீண்டும் படிக்கச் சொல்கிறது. சில கதைகள் முள்ளாய் மனதிற்குள் ஒரு வலியை தோற்றுவித்து கடக்கிறது. சில சிந்தனைகளை தூண்டுகிறது.

இப்படி எல்லா விதமான உணர்வுகளையும், சுவைகளையும் கொண்டு அற்புதமான ஒரு மாலையாக தொகுக்கப்பட்டிருப்பதைக் கண்டு மகிழ்கிறேன். இதில் பங்களிப்பு செய்திருக்கக் கூடிய அனைத்து படைப்பாளிகளையும் பாராட்டுகிறேன். மிக அழகான முறையில் தொகுத்து இந்நூலை வெளியிட்டிருக்கிற தொகுப்பாளருக்கும், வைகை பாண்டியன் பதிப்பகத்தாருக்கும் எனது நன்றியும் பாராட்டுகளும்! தமிழ் என்கிற மொழி எல்லாவிதமான காலத்துக்கும் தன்னை தயார்படுத்திக் கொண்டு நகர்ந்து கொண்டிருக்கிறது. அதன் காரணமாகத்தான் தமிழ் மொழி பல்லாயிரம் ஆண்டுகள் நீடித்து நிலைத்திருக்கிறது.

தமிழுக்கு கிடைத்திருக்க கூடிய இப் புதிய சின்னஞ் சிறு கதைகள் எனும் இலக்கிய வடிவம் இன்னும் சிறக்கும் என நம்புகிறேன்.

மிக அற்புதமான இந்த புத்தகத்தை படிக்கின்ற ஒவ்வொருவரும் இது தருகிற தரவுகளை அல்ல; தகவுகளை உள்வாங்கி வாழ்க்கைக்கு பயனுள்ள வகையில் மாற்றிக் கொள்ள வாழ்த்துகிறேன். இந்த இனிய புத்தகம் வெளிவர காரணமாக இருந்த அனைத்து நல்லுள்ளங்களையும் மீண்டும் மனமார பாராட்டுகிறேன். இனிய வாழ்த்துகள்!

# வாழ்த்துரை



..

முனைவர்.ஜீ.வி.பாண்டியன்

துறைத்தலைவர்

டி.பி.எம்.எல்.கல்லூரி

பொறையார்

சின்னஞ்சிறு கதைகள் தொகுப்பு - இந்நூலில் எழுதிய அனைத்து எழுத்தாளர்களையும் வாழ்த்துகிறேன். இன்றைய காலகட்டங்களில் கைபேசியை வைத்து காலத்தை கடத்திக்கொண்டு, வீணடித்து, வெறும்

நகைப்பையும் பொழுதையும் போக்கும் இளையசமுதாயத்தின் புத்தகம் வாசித்தல் என்பது குறைந்து போய்க் கொண்டிருக் கின்ற மனநிலையை மாற்ற மிகச் சிறப்பான, புத்துணர்ச்சி அளிக்கும் வாசிக்க துவங்கினால் இன்னும் வாசிக்கலாம், இன்னும் வாசிக்கலாம் என ஆர்வத்தை தூண்டுகிற இந்த தொகுப்பை மனதார வாழ்த்துகிறேன். இதற்காக இப்புத்தகத்தின் அனைத்து பகுதிகளையும் வாசித்துப் பார்த்ததில் அரசியல், நிர்வாகம், குடும்பம், இல்லாமை, இயலாமை, கல்லாமை, கள்ளுண்ணாமை, கடன், தொழில், இயற்கை, சுற்றுச்சூழல், சுற்றுலா, முன்னேற்றம், நாடு, நாட்டுப்பற்று என சொல்லிக்கொண்டே போகலாம்...

அளவிட முடியாத இரண்டடி திருக்குறளைப் போல இக்காலகட்டத்திற்கு

தேவையான மிக சிறப்பான அறிவுக் களஞ்சியம் தான் இந்த தொகுப்பு என கூறலாம். அறுப்பு காலம் முடிந்தது அடைகாத்துக் கொண்டிருக்கும் பறவை முட்டையுடன் காத்திருந்தது பொம்மையிலே.... அருமை .....நாட்டின் வறுமையை ஒழிக்க நட்சத்திர ஓட்டலில் நடந்த கூட்டம் ....

வங்கியில் கடன் பெற்று வீடு கட்டினேன் அதில் குருவி சொந்தமாக கூடு கட்டியது....

கள்ளுண்ணாமையை பற்றிய விவாதம் டாஸ்மாக் பாரில் நடந்தது....

என்ன அழகான சிந்தனைகள் அருமையான இந்த சிற்பிகள் இன்றைய வாழ்வியலில் படித்து மகிழ, பாடம் பயில அனுபவம் பெற, அறிவை பூண செய்த மிகச்சிறப்பான தொகுப்பு எனலாம். டெல்லியில் இருந்து இந்தியாவின்

அனைத்து மாநிலம், மாவட்டம் என அத்துணை எழுத்தாளர்களின் பதிவும் அடிமட்ட வாசிப்பாளனிலிருந்து உயர்நிலை அதிகாரிகள் வரை படித்து இன்புற, பயன்பெற அளித்த மிகப்பெரிய அறிவுக்கொடை தான் இந்த “சின்னஞ்சிறு கதைகள்” எல்லா வயதினரையும் இன்பத்தில் ஆழ்த்தும் எழுத்துக் கோர்வைகளை செதுக்கிய சிற்பிகளையும் தொகுத்த வல்லுநர்களையும் வாழ்த்தி இந்நூலை வாசித்து, யோசித்து வருங்கால சந்ததி பயன்பெற வாழ்த்துகிறேன்..

# பதிப்புரை

திருக்குறள் தந்த வள்ளுவரும் ஆத்திச்சூடி தந்த ஔவையாரும் தோன்றிய தமிழ் மரபில் நறுக்குத் தெறித்தார் போல சுருங்கச்சொல்லி விளங்க வைக்க வேண்டும். கதைகள் ஒவ்வொன்றும் அரை நிமிடத்துக்குள் படித்து முடிக்கும் படி இருக்க வேண்டும் எனக் கேட்டதும் கிடைத்தவை தான் இந்த தொகுப்பில் இடம் பெற்றிருக்கும் கதைகள். இவைகளை 10 செகண்ட் கதைகள் என்று ஆனந்த விகடனும், சிங்கிள் வரி சிறுகதைகள் என குமுதமும் வெளியிட்டன. அந்த பத்திரிகைகளில் எல்லாம் தொடர்ந்து எழுதி புகழும் பெருமையும் பெற்ற பல எழுத்தாளர்களின் சின்னஞ்சிறு கதைகளின் தொகுப்புதான் இந்த புத்தகம்.

படிக்க நேரமில்லை என்று

சொல்பவர்களும் படிக்க வேண்டும். உயரிய எழுத்துகளை படைக்க வேண்டும் என்ற நோக்கத்தோடு எங்களது தமிழக எழுத்தாளர் குழும ஒன்பதாம் ஆண்டு சந்திப்பில் வெளியிடப்படும் இந்த நூலை அனைவரும் வாசித்து இன்புற அன்புடன் அழைக்கிறோம்.

பிரியங்களோடு...

திருமயம் பெ. பாண்டியன்

வைகை ஆறுமுகம்

# 1. கும்பகோணம் கயத்தை

## சத்யா

குலுக்கலில் செல்போன் விழுந்தது.. சோகமானான் சோமன்... குண்டும் குழியுமான சாலையில் வேகமாக பைக் ஓட்டி வந்ததை நினைத்து.

கப்பல் நீரில் மூழ்கியும் உயிரிழப்பு இல்லை மழைநீரில் குழந்தை விட்ட காகித கப்பல்.

விளைச்சல் நேரம் பண்டிகை கொண்டாடியது சோளக்காட்டு பொம்மை பழைய சட்டையை புதுச் சட்டையாக மாட்டி.

மல்டி ஸ்பெஷாலிட்டி மருத்துவமனை எதிரில் புதிதாக உதயமானது அடகு கடை.

அரசு பணத்தில் தான் கட்டி திறந்து வைத்த அரசாங்க கட்டிடம் மழை நீர் ஒழுகுவதை

அழகுக்காக நீர்வீழ்ச்சி அமைத்த வகையில் செலவு என்று கணக்கெழுதி தொகை ஒதுக்கி கொண்டதை எண்ணி தன்னைத்தானே மெச்சிக் கொண்டார் அந்த தலைவர்!

## 2. ஈரோடு க.ரவீந்திரன்

அவசர சிகிச்சை முடிந்து திரும்பிய பாட்டியின் அவசர தேவைக்கு உதவியது பேத்தியின் நைட்டி.

மாஸ்க்கை சரியாக போடுங்கள் மிஸ் என்று தன் ஆசிரியைக்கு பாடம் சொன்னான் ஐந்தாம் வகுப்பு படிக்கும் சச்சின்.

ஒவ்வொரு ஆண்டும் தன் மனைவி இறந்த திதியில் அக்கறையோடு விரதம் கடைப்பிடித்து தர்ப்பணம் செய்து காக்கைக்கு உணவு வைத்து இரண்டாம் மனைவியோடு திவசம் கொடுத்தான் கணவன்.

தாங்கள் அணிந்து வந்த பேண்ட் சர்ட்களை கழற்றி வைத்துவிட்டு வேட்டி சட்டை அணிந்தார்கள் வேட்டி விளம்பரத்தில் நடிக்க வந்த நடிகர்கள்.

காலையில் வாசலில் போட்ட அழகிய கோலம் மதியம் பெய்த மழையில் கரைந்து போனதைக் கண்டு வருந்தியவள் அவள் போட்ட கோலத்தை இதுவரை வாட்ஸ் அப் ஸ்டேட்டஸில் அறுபது பேர் பார்த்திருப்பதைக் கண்டு ஆறுதல் அடைந்தாள்.

# 3. புதூர் பாலா

1

ஆசை நாயகியைக் கொலை செய்த மருதமுத்து, தன் கை கால்களைக் கழுவிக்கொண்டு, முகம் பார்க்கும் கண்ணாடியில் தலை வாரப் போனவன் திடுக்கிட்டுப் போனான், அந்தக் கண்ணாடியில் ஆசை நாயகி தெரிந்தாள்!

அந்த தமிழ்ப் படத்தை சென்சார் செய்த சென்சார் அதிகாரி செல்லமுத்து, இஷ்டத்திற்கு கத்தரி போட்டு, 14 ரீல் படத்தை 7 ரீல் ஆக்கிவிட்டு, தன் டூ வீலரை எடுக்க வந்தவர் திடுக்கிட்டார், டூவீலரின் சீட் கவரை யாரோ இஷ்டத்திற்கு கத்தரி போட்டிருந்தார்கள்..!

அந்த பிரபல தலைவரின் புதிய

இல்லத்தில் காணப்பட்ட வாசகம் ‘நகைச்சுவையை பகைச்சுவை ஆக்காதீர்கள்...!’

தாத்தா... நான் வாங்கும் சம்பளம், ஒரு கலெக்டர் வாங்கும் சம்பளமாக்கும்... என்ற பேரனிடம், தாத்தா சொன்னார் ‘நீ ஏப்பா அடுத்தவங்க சம்பளத்தை வாங்கறே...?’

படிச்சு படிச்சு சொல்லியும், இடதுகை பெருவிரல் ரேகை வைப்பதற்குப் பதிலாக, வலதுகை பெருவிரல் ரேகையை வைத்தார் மாயாண்டி...!

# 4. சென்னை கே. அசோகன்

மீன் வியாபாரி வீட்டில் வாஸ்து மீன்கள் துள்ளி துள்ளி நீந்திக் கொண்டே இருக்கின்றன...

ஆறு ஏக்கர் விவசாய நிலத்தை விற்றுவிட்டு
அறுநூறு சதுர வீட்டின் மாடியில் தோட்டம் அமைத்தார் – விவசாயி!

புல்லாங்குழல் விற்பவனின் மூச்சுக் காற்று காற்றோடு காற்றாக கலந்தது இசையாக!

கடற்கரையில் ″பலுடா″ வேண்டுமா? கொஞ்சியவன்
“பளுடா” என்று அரற்றுகிறான் கணவனான பின்னே!

சின்ன சின்ன பொய்கள் பிடிக்கும் என்றாள் காதலி
சின்னதாய் ஒரு பொய் நீ அழகி என்றேன்!

## 5. தஞ்சாவூர் எஸ்.இராஜேந்திரன்

கடவுளே தேர்தலில் போட்டியிடும் நான் தோல்வி அடைய வேண்டும் என வேண்டிக் கொண்டார் கவர்னர் ஆகும் ஆசையில் இருக்கும் அரசியல்வாதி!

இந்த மாத சம்பளத்தை வழக்கம் போல அம்மாவிடம் தருவதா இல்லை மனைவியிடம் தருவதா என குழம்பினான் புது மாப்பிள்ளை!

முதியோர் இல்லம் நடத்துபவரின் தாயார் சேர்க்கப்பட்டார் வேறு ஒரு முதியோர் இல்லத்தில் .

அடங்காப்பிடாரி மனைவியை எப்படி அடக்குவது என வழி தெரியாமல் தவித்தான் யானைப்பாகன் !

தற்கொலைக்கு முயன்றார் ஏகப்பட்ட கடன் கொடுத்து திரும்ப வசூலிக்க முடியாத

# 6. சென்னை மலர்மதி

மரக்கன்று நடும் விழாவில் கலந்துக்கொண்டார் கார்பெண்ட்டர் கண்ணாயிரம்!

உண்ணாவிரதப் போராட்டத்துக்கு முழு ஆதரவு அளித்தார் பிரியாணி கடை பாஷா பாய்!

தன் சொந்தப் படத்தையே தடை விதிக்கக் கோரி வழக்குத் தொடர ஆட்களை ஏற்பாடு செய்தார் டைரக்டர் டேவிட், சுய விளம்பரத்துக்காக!

அதிகப்படியான ஒப்பனையுடன் அவசரமாக ரெடியாகிக் கொண்டிருந்தாள் ராகினி, ஆன்லைன் கிளாஸ் எடுக்க.

செய்யாத குற்றத்திற்கு தன் தம்பியைப் பிரம்பால் நாலு சாத்து சாத்திவிட்டு,

ஆத்திரமாய் வெளியே போன சங்கரை, ஊரடங்கு விதியை மீறிய குற்றத்துக்காக லத்தியால் நாலு சாத்து சாத்தி அனுப்பியது போலீஸ்!

# 7. இராமநாதபுரம் எம்.கல்லூரி ராமன்

ஐ.சி.யு வார்டில் இருக்கும் தந்தை, மகனைப்பார்த்து கேட்டார். "சாப்டியாப்பா?"

விற்பனை ஆகாத ஓட்டை பலூன்களை ஒதுக்கி வைத்தார்
பலூன் வியாபாரி... தன் மகன் விளையாடுவதற்கென்று.

அடிக்கடி விக்கல் எடுப்பதால் தன்னை மகன் நினைப்பதாக
நினைத்து சந்தோஷப்பட்டாள்- முதியோர் இல்லத்தில்
இருக்கும் தாய்!

நிலவில் விவசாயம் செய்ய நிலம் இருக்கா என்ற
ஆராய்ச்சியில் ஈடுபட்டான், விவசாய நிலத்தில்

வீடு கட்டிய மனிதன்!

எல்லாம் விற்றுப் போனதால் சந்தோசமாய்
மழையில்
நனைந்து கொண்டு வந்தான் குடை வியாபாரி!

# 8. வேலூர் மூ. மோகன்

“சுண்டு விரலில் வெள்ளி மோதிரம் அணிந்தால் அதிர்ஷ்டம் கொட்டும்!” என வாடிக்கையாளரிடம் சொல்லிக் கொண்டிருந்த கோடீஸ்வர நகைக்கடை முதலாளியின் சுண்டு விரல் ‘மிஸ்ஸிங்’!

அரை சாண் வயிற்றுக்காக, கொளுத்தும் அசுர வெயிலில் கருவாடானார் மீன் வியாபாரி!

அடைக்கலம் தந்த மரத்திடம் மானசீகமாய் மன்னிப்பு வேண்டியது -பசிக்காக மரத்தை கொத்தும் மரங்கொத்தி!

சட்டத்தின் ஓட்டை வழியே தப்பித்த கொலைக் குற்றவாளியை தர்மம் தண்டித்தது ஆக்ஸிடெண்ட் உருவில்!

தொழிலுக்கு போய்விட்டு வந்த கபாலி இன்ஸ்பெக்டரைப் பார்த்து பயந்து

நடுங்கினான், தன் மொத்த வருமானத்தையும் ‘மாமூலா’ கறந்திடுவாரோ என்று!

# 9. வீ.வைகை சுரேஷ்

சிறப்பு தரிசனம், பொது தரிசனம் இரு வழி பக்தர்களுக்கும் ஒரே புன்னகை முகமாக நின்றார், சாமி!

அறுவடை முடிந்தும் அடைகாத்துக் கொண்டிருக்கிறது, காவல் பொம்மையில் கூடு கட்டிய குருவி - முட்டையுடன்!

“கதவுக்குப் பின்னாடி போய் ஒளிஞ்சுக்கிறேன். கண்டுபிடிங்க...” என்றது குழந்தை!

சாலையோர ஓவியன் வரைந்து முடிக்க மழை வந்தது. நனைய துவங்கினார் கோவர்த்தன மலையை குடையென பிடித்த ஓவிய கிருஷ்ணர்.

வங்கியில் கடன் வாங்கி வீடு கட்டினேன் சொந்தமாக கூடு கட்டி குடி வந்தது குருவி.

# 10. சென்னை சின்னஞ்சிறுகோபு

புளியமரத்திலிருந்து கீழே விழுந்தவன், கால் வீக்கம் போக புளியம் இலைகளை வென்னீரில் போட்டு, அந்த நீரை காலில் ஊற்றி உருவிவிட்டுக்கொண்டிருந்தான்!

வேடனிடம் புது புலித்தோல் வாங்கிய முனிவர் , அதை ஆற்றில் அலசி காயவைத்தபோது, அது சாயம் போயிருந்தது!

‘இன்னைக்கும் புளிக்குழம்புதானா’ என்று மனதிற்குள் அலுத்துக்கொண்ட சர்க்கஸ் ரிங் மாஸ்டர், அதை மனைவியிடம் சொல்ல பயந்து பேசாமல் சாப்பிட்டார்!

நீண்ட காலத்திற்கு பிறகு உள்ளூருக்கு வந்த மந்திரி வேலப்பன், சிறுவயதில் தன்னை கட்டி வைத்து அடித்த புளியமரத்தை, ரோடு விரிவாக்கத்திற்காக வெட்டிவிட்டார்கள்

என்பதை அறிந்து மகிழ்ச்சியடைந்தார்!

“புலி பூனைக் குடும்பத்தை சேர்ந்தது என்பதால், அது நம் குறுக்கே வந்தால் நமக்கு அதுதான் கடைசி சகுனம்” என்று வேடிக்கையாக பாடம் நடத்தினார் ஜோதிடர் மகனான அந்த விஞ்ஞான ஆசிரியர்!

# குடந்தை பரிபூரணன்

வீட்டில் இரண்டு பேருக்கு சமைக்க முடியாமல் தடுமாறினார் கல்யாண சமையற் காரர்.

பசும்பால் வாங்கப் பாற் பண்ணைக்கு ஓடினார்

பாக்கெட் பால் வியாபாரி

கொட்டித் தீர்ப்பது போல வந்த கோடை மழை, திசை மாறிப் போன ஏமாற்றத் துடன் தனித்தனியாக நடக்கிறோம் கையில் ஒரு குடையுடன்.

பொம்மைக்கு கதை சொல்லிக் கொண்டே தூங்கிப் போனது குழந்தை.

துப்பரவுத் தொழிலாளியான அம்மாவின் காலில் விழுந்து ஆசீர்வாதம் வாங்க ஓடினாள் கல்லூரியில் பட்டம் பெற்ற மாணவி!

# 11. திருப்பூர் சாரதி

'வாழ்த்த வயதில்லை வணங்குகிறேன்' என்று, கட்சித் தலைவரின் 20 வயது மகனுக்கு பிறந்தநாள் போஸ்டர் அடித்தார், 50 வருடங்களாக கட்சியில் இருக்கும் தொண்டர்!

ஆயிரம் ரூபாய் ரசிகர் டிக்கெட்டில் படம் பார்த்துவிட்டு வீடு திரும்பிய போது, 50 ரூபாய் பாக்கிக்காக வீட்டிற்குமுன் சத்தம்போட்டுக்கொண்டிருந்தார் காய்கறி வண்டிக்காரரர்!

ஒற்றை சக்கரத்தில் பைக் ஓட்டி சாகசம் செய்தவன் அடிபட்டு, இப்போது மூன்று சக்கர ஸ்கூட்டரில் வலம்வருகிறான்!

பிச்சை எடுத்த குழந்தைக்கு பத்து ரூபாய் போட்டதை வீடியோ எடுத்து வைத்துக்கொண்டான், இன்ஸ்டாகிராமில்

போட்டு லைக் பிச்சை வாங்குவதற்காக!

குறைவான சிமெண்ட் போட்டு ஆற்றின்மேல் கட்டப்பட்ட பாலம் இடிந்ததால், மணல் மீண்டும் ஆற்றிலேயே கலந்தது!
# தஞ்சை தாமு

அமாவாசையில் அம்மா கூவி அழைக்கும் காகங்கள் நேற்று வற்றல் காய்ந்த மொட்டை மாடியில் அவளால் விரட்டப்பட்டவை

இன்று டாஸ்மாக் இருக்கும் இடத்தில்தான், அன்று கள் குடித்ததற்காக என்னைத் தண்டிக்க பஞ்சாயத்து கூடிய அரசமரம் இருந்தது.

என் அன்புக் கணவர் மொட்டை மாடியில் நிலாவை நெடுநேரம் பார்ப்பது ஏன் என்பதற்கு விடை சொன்னது அவரது பழைய டைரியில் இருந்த பாடம் செய்யப்பட்ட வாடிய ரோஜா

கொல்லைச் சுவரில் தட்டப்பட்ட அந்த விரட்டியை எடுக்காமல் விட்டிருந்தார் தாத்தா,

மறைந்த பாட்டியின் விரல்கள் அச்சு அதில் இருப்பதால்.

தகரக் கூரையில் மழையும், கண்ணாடிக் கதவில் குருவியும், கனினிப் பயிற்சி மையத்தில் நானும் தட்டச்சு செய்து கொண்டிருந்தோம்.

# 12. நெய்வேலி கி.ரவிக்குமார்

மாமூல் கொடுக்க முடியாததால், 15 வருடம் தலைமறைவாய் இருந்த குற்றவாளி பெருமாள் கைது செய்யப்பட்டான்.

பெண் குற்றவாளியின் புகைப்படம் கிடைத்ததும், ஜூம் செய்து அவள் போட்டிருந்த நகை மாடலை பார்த்தார் இன்ஸ்பெக்டர் விமலா.

‘சாமிக்கும் பேய்க்கும் பயங்கர சண்டை’ என கதை சொன்ன தாத்தா திகைத்துப் போனார், ‘பேயோட சாமி யார் தாத்தா?’ என்ற குழந்தையின் கேள்விக்கு!

இடுப்பில் இருந்த குழந்தை நழுவியதும், சட்டென பிடித்தாள், குழந்தையின் கையில் இருந்த செல்போனை!

“என்னை விட வேலை முக்கியமா?” என்று

கத்தியவளிடம், “இந்த வேலைக்காக தானே என்னை திருமணம் செய்தாய்!” என்றதும் அடங்கினாள்.

# 13. கேரளா சி. ஆர். ஹரிஹரன்

வேலைக்கு லேட்டா வர்றவங்களுக்கு கம்பெனி நடத்தும் மீட்டிங் காலையில் ஒன்பது மணிக்கு நடக்கும் என்று அறிவித்த மீட்டிங் நடந்தது லேட்டாக பத்து மணிக்கு!

மகப்பேறு மருத்துவ மனையில் பணி புரியும் லேடி டாக்டர் இன்னும் தனக்கு ஒரு குழந்தை பிறக்கவில்லையே என்று மிகவும் மனம் வருந்தினாள்!

நட்சத்திர ஹோட்டலில் செமினார் நடந்தது, "இந்தியாவில் இருந்து எப்படி வறுமையை ஒழித்துக் கட்டுவதென்று"!

போலீஸ் இன்ஸ்பெக்டர் வீட்டுலேயே திருடன் தன் கைவரிசை யைக் காமிச்சான், அவன் கொடுத்த மாமூலை மீட்க வேறு வழி தெரியாமல்!

இப்ப உங்களுக்கு ரொம்ப பணக் கஷ்டம்னு சொன்ன கைரேகை ஜோசியரிடம், உங்களுக்கு த் தரவும் என்கிட்ட பணமில்லைன்னு சொல்லி நடையைக் கட்டினான் கதிரேசன்!

## 14. கிருஷ்ணகிரி

### இரா.வசந்தராசன்

வேலையின் மதிப்பை உணர்ந்து கோவில் இரவுக் காவலர் வேலையை ஏற்றுக் கொண்டான் நாத்திகன் மோகன்!

திருமணமானதிலிருந்து மனைவியுடன் சண்டை போடவேயில்லை சினிமா ஸ்டண்ட் மாஸ்டர் சிவா!

ஞாபக மறதியுடைய மூர்த்திக்கு தன் மகளின் திருமணத்திற்கு யார் யார் வரவில்லை என்பது மட்டும் ஞாபகத்தில் இருந்தது!

மகன் தன்னுடைய குரலில் தலைமை ஆசிரியரிடம் பேசி விடுமுறை வாங்குவதைப் பார்த்து அதிர்ந்தான் மிமிக்கிரி கலைஞன் முத்து!

“என் அம்மாவுக்கு நல்ல குணம்” என்று தோழியிடம் கூறினாள் வில்லி நடிகை வினயாவின் மகள் சுதா!

# 15. இரா.இரவிக்குமார்

8

‘தடியடி’ நடத்திவிட்டு, காவல்துறையினர் நான்கு பேர் ஆஸ்பத்திரியில் ‘அட்மிட்’ ஆகினர்!

பேரனுக்குக் கண்திருஷ்டி சுற்றித் தன் கையில் துப்பச் சொன்ன பாட்டியிடம் ‘பாட்டி, சானிட்டைசர் போட்டுக் கையைக் கழுவ மறக்காதே! என்றான் பேரன்.

“பாட்டி, தலைவலிக்கு நீ சொல்லும் மருந்து நெட்டில் இல்லையே! எப்படி நம்புவது?” என்று கேட்டான் பேரன்.

செம்பட்டை முடி அலங்காரத்துடன் வந்து நின்ற மணமகளைப் பார்த்துத் திகைத்த அம்மாவிடம் ‘நீதானே எதிலும் கறுப்பு கூடாதுனு சொன்னே!’ என்று சமாளித்தான் மணமகன்.

குண்டும் குழியுமாக ரோட்டை வைத்திருந்த மாநகராட்சிக்கு நன்றி சொன்னான் பின்னால் அமர்ந்திருந்த தன் காதலியுடன் ஸ்கூட்டரில் சென்ற சதீஷ்.

# 16. புது டெல்லி ஆர். ஹரிகோபி

ஹோட்டல் மேனேஜ்மெண்ட் படிப்பில் கோல்ட் மெடல் வாங்கி ஐந்து நட்சத்திர ஹோட்டலில் வேலை செய்யும் ரகு வீட்டு சமையலுக்கு ஆள் தேடிக் கொண்டிருந்தான்.!!

அனைத்து கட்சிகளிடமிருந்தும் ஓட்டுக்கு பணம் பெற்றுக் கொண்டபின், தனது வோட்டைப் போட்டான் நோட்டாவிற்கு. “உங்களுக்கு மட்டும்தான் துரோகம் செய்ய தெரியுமா…?” என்று கூறிக்கொண்டே….

பிறந்தநாள் விழாவின் ஆரவாரமான J இரைச்சலில் பிறந்த நாள் கொண்டாடும் குழந்தையின் அவஸ்தையான அழுகை அமுங்கிப் போனது.

மோட்டார் சைக்கிளில் கைகளை விட்டு சாகசம்

செய்தவனை கடவுளும் கைவிட்டு விட்டார்.

மகனுக்கு நாளை பொதுத் தேர்வு. பெற்றோருக்கு இன்று சிவராத்திரி!

# 17. மேல்மங்கலம் பத்ரா (ஆர். ராகவன்)

பள்ளி ஆண்டு விழா பாட்டுப் போட்டியில் திருநங்கையின் வளர்ப்புக் குழந்தை பாடியது, ‘அம்மாவும் நீயே, அப்பாவும் நீயே...!‘

பழைய பொருட்களை எடைபோட்டு வாங்கும் தொழில் செய்ய நினைத்தவர், முதலில் ’புதியதாக’ ஓர் எடை பார்க்கும் இயந்திரத்தை வாங்கினார்...!”

’தீண்ட’த் தகாதவர்கள் என்று யாரையும் பாகுபடுத்திப் பார்ப்பதில்லை, பாம்புகள்...!

மலை மேல் இருக்கும் ஆஞ்சநேயர் கோயிலுக்குப் போக துணைக்கு அழைத்தவனிடம், போகிற வழியில் குரங்குத் தொல்லை இருக்கும் என்று கூறி வர மறுத்தான் நண்பன்...!

உடம்பு சரியில்லை என்று காரணம் சொல்லி லீவு போடமுடியவில்லை, மருத்துவமனை ஊழியரால்...!

## 18. முனைவர் கரு.

## செந்தில்குமார், கோவை

தகப்பனுக்கு கிடைக்காத உணவு குழந்தைக்கு கிடைக்கும் உணவு ஆனால் சாப்பிடத்தான் வேண்டும் மொபைல் போன்!

அண்ணாச்சிக் கடைக்காரர் முறைத்து பார்த்தார் தனது வாடிக்கையாளர்களுக்கு மளிகை பொருள் கொண்டுவரும் அமேசான் ஊழியரை

வீட்டில் போட்ட பலகாரங்களை கடைப் பேப்பரில் சுற்றினான் தனது குழந்தைக்கு கடையில் வாங்கியது தான் பிடிக்கும் என்று

குழந்தைக்கு “கொரானா” பார்க் ஆனது பப்ஜி கேம் ஐஸ்கிரீம் ஆன வெப்பன்ஸ்

வீட்டில் குழந்தையுடன் சண்டை போட்டு

குழந்தைகள் விளையாடும் ஆப் செய்யத் தொடங்கினான்

தனது ஐடி கம்பெனி வேலைக்காக

# 19. திருச்சிற்றம்பலம் சுரேஷ்

குண்டும் குழியுமாக சாலை இருப்பதாக புலம்பினர் கார் ஓட்டுநரிடம் அரசியல்வாதி... அது தன்னுடைய தொகுதி என்பதை மறந்து.

ஒரே ஒரு வெள்ளிப்பதக்கம் ஒலிம்பிக்கில் பெற்று ஊரையே மகிழ்ச்சிப்படுத்தினார்.. ஓடிப்போய் திருமணம் செய்துக்கொண்ட தடகள வீராங்கனை!

மீண்டும் மீண்டும் அரசு தேர்வில் தோல்வி அடைந்தான்...தலைமை ஆசிரியர் மகன்.

விருப்ப ஒய்வு பெற்று வீட்டு வேலை செய்தார்...
படுத்த படுக்கையிலிருக்கும் கணவருக்காக மனைவி.

சுதந்திர தியாகி சுதந்திர கொடியை ஏற்றிவிட்டு தன்னுடைய உரையில் “தனக்கு

சரியாக பென்ஷன்” கிடைக்கவில்லை என்று கூறினார்.

# 20. சென்னை ஆனந்த் சீனிவாசன்

குலம் தாழ்ச்சி சொல்லல் பாவம் போதித்த தமிழாசிரியர் பள்ளி இடைவேளையில், கைக் குழாயில் தாழ்ந்த சாதிப் பெண்மணிக்கு தண்ணீர் அடித்துக் கொடுத்த மகனுக்கு பிரம்படி கொடுத்தார்.

ஊனம் ஒரு பொருட்டல்ல சொன்ன தந்தை தன் மகன் ஊனமுள்ள பெண்ணைத் திருமணம் செய்து வந்தபோது வீட்டை விட்டு விரட்டினார்.

புதிதாகக் கட்டிய வீட்டில் நிறைய அறைகள் இருந்தும் இடமில்லை என விரட்டி விட்ட தாய் ஒனக்கு மட்டும் என் கருவறையில் இடம் கொடுத்தேனே எனப் புலம்பினாள்.

உயிரோடு இருந்த போது அம்மாவுக்குச்

சோறு போடாத மகன் நினைவு நாளன்று நூறு பேருக்கு அன்னதானம் செய்தான்.

மருமகளை மலடி என்று சொன்ன மாமியார் மருத்துவப் பரிசோதனையில் மகன் ஆண்மை இல்லாதவன் என்றதும் அதிர்ந்தாள்.
# வேலூர் முத்து ஆனந்த்

இனிமேல் எதையுமே ‘அமைதி’யாகப் பணியாற்றி ’சாதிக்க வேண்டும்’ என்று முடிவெடுத்தான் சவுண்டு எஞ்ஜினியர் சக்திவேல்!

தன்னால் பாதிக்கப்பட்டவர் ’ஹார்ட் அட்டாக்’கில் இறந்ததும் ’பொய் வழக்கு’களை எடுப்பதை உடனே நிறுத்தினார் வழக்கறிஞர் ராஜராஜன்!

பாலில் ‘தண்ணீர்’ கலந்து விற்பதால் பால்காரரை மாற்றினான் ‘கந்து வட்டி’ சிகாமணி!

தனக்கு ஒரு நாள் கூடச் ‘சமைத்துப் போடாத’ தன் மனைவி ‘சமையல் கலை நிபுணர் பட்டம்’ வாங்கியதை அறவே வெறுத்தார் பாலன்!

தன் மனைவி தன்னை விட்டுப் பிரிந்த பிறகு தான் ‘விவாகரத்து வழக்கு’களின் ’வலி’ தெரிந்தது வழக்கறிஞர் பிரவீணுக்கு!

# 21. தஞ்சாவூர் ரிஷிவந்தியா

பிரபல நகைக்கடை முதலாளியிடம் ‘செய்கூலி’ கேட்ட கூலிப்படைத் தலைவன் ஆனான்- ‘சேதாரம்’!

மெகா சீரியல்கள் ‘சிரிக்க’ வைத்தன- கிளிசரின் விற்பவர்களை!

அன்றில் பறவை பற்றி பாடம் நடத்திக் கொண்டிருந்தார்- மனைவியை விவாகரத்து செய்த ஆசிரியர்!

“ நீ சாப்பிடறது புழுங்கரிசி சோறா, பச்சரிசி சோறா?” என்று கேட்டவரிடம், “ தண்டச்சோறு” என்றான் வேலையில்லாப் பட்டதாரி வெங்கட்- சோகமாக.

கப்பல் கவிழ்ந்த கவலையை மறக்க கை வைத்தார் தலைவர்-கள்ளக்காதலியின் கன்னத்தில்!

# 22. தருமபுரி வெ.சென்னப்பன்

சிவசி எழுத யோசித்து கொண்டிருந்தார் நாவல் எழுத்தாளர்..!

புதுப் படத்திற்கான டிக்கெட்டை கொடுத்தவுடன் மொபைலில் படம் பார்த்துக் கொண்டிருந்தான் தினேஷ்.

சிறு காயத்திற்காக பதறினான் கசாப்புக் கடைக்காரன்.!

காய்கறி கடையில் எடையை சரியாக போடச் சொல்லி கடைக்காரரிடம் சண்டை போட்டார் ரேஷன் கடைக்காரர்.

சுவற்றில் கிறுக்கி விளையாட முடியவில்லை குழந்தையால் வாடகை வீட்டில்.!

# 23. சித்தோடு

## கமலக்கண்ணன்.இரா

அரசமரங்கள் வெட்டப்பட்டு புதிதாக கட்டப்பட்டது- செயற்கை கருத்தரித்தல் மருத்துவமனை.

உலகளந்த பெருமாளுக்கு பிளாட்பாரவாசிகள் கட்டினர் சிறிய கோவிலை...!

எல்லோர் கையிலும் செல்போன் மங்கலாக தெரியும் நிலா...!

கார் வேண்டாம் பொக்லைன் தான் வேண்டும் என அடம் பிடித்தது குழந்தை

தங்கப்பதக்கம் வென்றவனை கூகுளில் தேடினர் என்ன ஜாதியென்று?

# 24. அஜித்

“உனக்கும் மாப்பிள்ளைக்கும் விவாகரத்தாயிடுச்சுன்னு சொல்லவே இல்லியேம்மா...” என்ற அம்மாவிடம், “நான் ஃபேஸ்புக்குல சிங்கிள்னு அப்டேட் செய்திருந்தேனே...” என்றாள் ரேஷ்மா.

ஒரே ஆபீசில் வேலை செய்யும் கணவன்-மனைவி ஒன்றாக பைக்கில் செல்வதை ஆசையோடு பார்த்து நிற்கிறார்கள் ஒரே தீப்பெட்டித் தொழிற்சாலையில் வேலை பார்க்கும் அம்மாவும் மகளும்.

பாவமமாடுகளை கொல்வது பாவம் என்று சொன்னவர்கள் அதையே காரணமாகச் சொல்லி மனிதனை கொன்றார்கள்.

இலக்கியவாதிகள் கள்ளுண்ணாமை அதிகாரத்தைக் குறித்து ஆழமாக

விவாதிக்கிறார்கள், டாஸ்மாக் பாரில்.

நவராத்திரியின் போது விற்காத பொம்மைகள் கொலுவாக வீற்றிருக்கின்றன பொம்மைக்காரனின் வீட்டில்.

# 25. திருச்சி அ.வேளாங்கண்ணி

ஒவ்வொரு தேர்தலின் போதும் டெபாசிட்டை இழந்து கொண்டிருக்கிறது ஜனநாயகம்.

சிறுகச் சிறுக சேமித்ததை மழைநீர் அடித்துச் செல்வதை பார்த்தவாறே, அடுத்த சேமிப்புக்கு கிளம்பியது எறும்புக்கூட்டம்.

நிரம்பி வழிந்த மெசேஜ்களை அழித்துக்கொண்ட வந்தவன், அந்த நாளின் இரண்டு மணி நேரத்தையும் அழித்திருந்தான்.

வரிக்கு வரி வருத்தப்பட்டுக் கொண்டே இருந்தான், வருஷம் தவறாமல் வருமான வரி கட்டும் வருண்.

வலியுடன் படுத்திருக்கும் பிரசவித்த தாய்க்கு ஒத்தடமாய் இருக்கிறது மழலையின் குறுநகை.

# 26. தர்மபுரி மு.மதிவாணன்

மாஸ்க் போடுன்னு சொன்னா கேட்க மாட்டாங்க.. பொது இடத்தில் புகை பிடிக்காதீங்கன்னு சொன்னா கேட்க மாட்டாங்க.. என்று மக்களை நொந்து கொண்டே நடு ரோட்டில் திருஷ்டி பூசணிக்காயை உடைத்து விட்டுச் சென்றான் அவன்.

இந்த இடத்தில் தானா இவ்வளவு சீழ்க்கை ஒலிகளும் கை தட்டல்களும் கேட்டது என்று பார்த்துக் கொண்டிருந்தான் இடிக்கப்பட்ட சினிமா தியேட்டர் இருந்த இடத்தைப் பார்த்து.

நடுநிசியில் பேய் கதை எழுதிக் கொண்டிருந்த திகில் எழுத்தாளரின் காதருகில் ‘எங்களை விட்டால் உங்களுக்கு எழுதுறதுக்கு வேற கதையே கிடைக்காதா’

என்ற குரல் கிசுகிசுப்பாய் கேட்டது.

“ஐயா சாமி ஏதாவது கொடுங்க உங்களுக்கு புண்ணியமா போகும்” என்ற கிழவியின் குரலைக் கேட்டு பத்து ரூபாயை கொடுக்கப் போனவன் இருபது ரூபாயாக கொடுக்க முடிவெடுத்து வீட்டினுள் சென்றான், கிழிந்த இருபது ரூபாய் நோட்டை எடுத்து வர.

வங்கக்கடலில் புயல் சின்னம் என்ற அறிவிப்பைக் கேட்டு அடிக்கடி இப்படி புயல் வந்தால் தன் மகளை எப்படி ‘கரை சேர்ப்பது’ என்ற கவலையில் ஆழ்ந்தான் அந்த மீனவன்.

# 27. திருநெல்வேலி

## ஏ.ஜி.முகம்மது தெளபீக்

இரக்கமற்ற தொழிலதிபர் ஊனமுற்றோர்களை தேடி தினம் காரில் சென்று உதவி வந்தார், விபத்தில் தன் இரு கால்களையும் இழந்த நாட்களிலிருந்து.

காற்றின் துவம்சத்தால் உடைந்து சின்னா பின்னமாகி குப்பையாக காட்சியளித்தது, இங்கு குப்பைகளை கொட்டாதீர்.! எச்சரிக்கை பலகை.

மித வேகத்தை மீறி சென்று உயிரை விட்டு என் வாழ்க்கையையும் பாழாக்கி விட்டானே பாவி.! என வருந்தியது பைக்.

தன் வீட்டு மின் கட்டண உயர்வை கண்டு திடுக்கிட்டு போனார் மின் கணக்கீட்டாளர்.

ருசியான பூரி வியாபாரத்தை முடித்து வீட்டிலிருந்து வந்த பழைய சாதத்தை உண்டு பசியாறினான் வியாபாரி கணேசன்.

# 28. தஞ்சாவூர் வளர்மதி

## ஆசைத்தம்பி

அடுத்த படத்தில் எனக்கு வாய்ப்பு தராவிட்டால் நீங்கள் என்னிடம் பாலியல் சீண்டல் செய்ததாக புகார் அளிப்பேன் ” என்றும் மிரட்டினாள் அந்த நடிகை

கட்டிய துணியுடன் வா உன்னை கண்கலங்காமல் காப்பாற்றுகிறேன் என்று கூறிய காதலனுடன் ஓடிப் போவதற்காக தயாராகிக் கொண்டிருந்தவள் அவன் மீண்டும் அழைத்து, “மறக்காமல் அத்தனை நகைகளையும் எடுத்து வா” என்று போனில் கூறியதை கேட்டு ஓடிப்போகும் திட்டத்தை கைவிட்டாள்.

கால் இல்லாத பிச்சைக்காரன் பார்வையற்ற யாசகன் தட்டில் பணம்

போட்டான்.

கூண்டோடு சாகலாம் என்று குழந்தைகளுக்கு விஷத்தை கலந்து தரும் தாயிடம் தம்பியை விட தனக்கு பால் குறைவாக இருக்கிறது என்று சண்டை போடுகிறது குழந்தை.

இளம் வயதிலிருந்து இதுவரை பொக்கிஷமாக சேர்த்து வைத்திருந்த காதல் கடிதங்களை யாரும் இல்லாத நேரத்தில் தீயிட்டு கொளுத்தினார் 75 வயது தாத்தா.
# நாகப்பட்டினம் சு.மூன்சுதாகரன்

கண்ணன் வேடமில்லா ஏழைக் குழந்தை விறகடுப்பிற்கு ஊதாங்குழல் ஊதியது.

கையொப்பமிட்டு கணவனைப் பெற்றுக் கொண்ட மனைவியின் அலறலுக்குப் பின் அமைதியானது பிணவறை!

ஏலத்தில் எடுக்கப்பட்ட வாளை மீன்

விற்பனை செய்யப்பட்டதும் மீன் காரி வீட்டில் கொதித்தது முருங்கைக்காய் குழம்பு!

இரண்டே மாதத்தில் கருக்கலைப்புச் செய்யப்பட்டது நேரத்திற்கு உடல்நலம் கவனிக்கத் தவறிய ரீல்ஸ் பிரபலம்!

ஆன்லைனிலையே வாழும் அம்மாவிடம் சொன்னது குழந்தை விநாயகர் சதுர்த்திக்கும் ‘கொழுக்கட்டை’ ஆர்டர் செய்!

## 29. தஞ்சாவூர் தே. ராஜாசிங் ஜெயக்குமார்

தற்கொலைக்காக பைக்கில் விரைந்து கொண்டிருந்த மாயனை, தடுத்து நிறுத்தினார் டிராஃபிக் போலீஸ்... நோ என்ட்ரியில் வந்ததாக...

பலமுறை தோற்றவன் இறுதியில் வெற்றி கண்டான் தற்கொலையில்!

நிலச்சரிவில் சிக்கி உயிர் தப்பிய நாய் இறுதியில் கண்டு பிடித்தது எஜமான் வீடு இருந்த இடத்தின் சுவடுகளை...

கேட்க கேட்க சுகமாக இருக்கிறது, பக்கத்து வீட்டுக்காரரின் பஞ்சப்பாட்டு.

அடுத்த வாரம் திருமணமாகப் போகிற இளம் டிரைவரின் பயணத்தில், பின் நோக்கி

# 30. திருநெல்வேலி கல்லிடை

## வெங்கட்

ஸ்டார் ஹோட்டலில் வேலை கிடைத்ததற்கு, நண்பர்களுக்கு பார்ட்டி வைத்தான் குமார், கையேந்தி பவனில்.

“ஆக்ஸிடெண்ட் பண்ணின வண்டி நம்பரை நோட் பண்ணினியா?” என இன்ஸ்பெக்டர் கேட்க, “நம்பர் பார்க்கல சார்.. ஆனா வண்டிக்கு பின்னாடி ‘நீதித்துறை’ னு எழுதியிருந்துச்சு” என்றான் நேரில் பார்த்தவன்!

“காரை விட்டு ஏத்திட்டு நிக்காம போயிட்டாங்க பாவிங்க, எப்படியாவது காப்பாத்திருங்க டாக்டர்…” கெஞ்சினார் முத்துசாமி, கோவிலுக்கு நேர்ந்துவிட்ட ஆட்டைக் காட்டி.

“நெஞ்சுவலின்னு ஆஸ்பத்திரிக்குப் போனேன், லட்சக்கணக்குல கறந்துட்டாங்க, சேவையா செய்யவேண்டிய மருத்துவத்தை இப்பல்லாம் வியாபாரமா மாத்திட்டாங்க!”- ஆதங்கப்பட்டார் தனியார்ப் பள்ளித் தாளாளர்.

“எவ்வளவு செலவானாலும் பரவாயில்ல, என் மகனை எப்படியாவது காப்பாத்துங்க சார்...” கண்களில் நீருடன் கெஞ்சினார் டாக்டர் மனோஜ், வக்கீலிடம்!

## 31. நாகை தங்க.நாகேந்திரன்

கழுத்து நிறைய தங்கமும் வைரமும் அணிந்திருந்தாள் கவரிங் கடைக்காரரின் மனைவி.

காவிரியில் நீர் வராததால் தற்கொலை செய்துகொண்ட விவசாயிக்கு வாய்க்கரிசியாக வந்தது கர்நாடக பொன்னி.

தனது மகனின் அட்மிஷனுக்காக தனியார் பள்ளி வாயிலில் தவம் கிடந்தார் அரசுப்பள்ளி ஆசிரியர்.

மதுவிலக்குப் பிரிவில் வேலை கிடைத்ததற்காக நண்பர்களுக்கு ட்ரிங்க்ஸ் பார்ட்டி வைத்தார் காவலர் பன்னீர் செல்வம்.

## 32. கடலூர் தேன்ராஜா

“இந்த பால்காரன் 'பசும்பால்'னு சொல்லி எதைத்தான் கொடுக்கறானோ தெரியலை” என சொல்லிக்கொண்டே தன் குழந்தையின் ஃபீடிங் பாட்டிலில் பாலை ஊற்றினாள்... சமீபத்தில் அம்மாவாகியிருந்த கோமதி!....

தூங்குவதற்கு முன் அதிகாலை 4 மணிக்கு எழுந்திருக்க அலாரம் வைத்துக்கொண்டிருந்தான், அந்த அபார்ட்மெண்ட்டில் ‘நைட் டியூட்டி’ பார்க்கும் வாட்ச்மேன் கந்தசாமி....

அந்த ஓலா டாக்ஸி டிரைவர் தன் பக்கத்தில் வந்தமர்ந்த பயணியான விமான பைலட் விக்னேஷிடம் சொன்னான், ” சார் ‘சீட் பெல்ட்’ போட்டுக்குங்க!”....

“சீக்கிரம்... சீக்கிரம், சாயங்காலம் மணி

4 ஆகப்போகுது.. அதுக்குள்ள உள்ளே போயிடணும்., இன்னும் கொஞ்ச நேரத்தில் எல்லா கதவு ஜன்னல்களையெல்லாம் சாத்திடுவாங்க.. ம்.. ம்..” அவசர அவசரமாக எல்லா கொசுக்களும் அந்த பங்களாவுக்குள் நுழைந்து கொண்டிருந்தன…

“சுரேஷ்! 100 அடி உயரத்திலிருந்து குதிக்கப்போற… பார்த்து எப்போதும் போல என் ஸ்டைல்ல குதிச்சிடு, எனக்கு 100 பர்செண்ட் சூட் ஆகிற ஒரே டூப் நீதான்.. உனக்கு ஏதாவது ஆயிடுச்சுன்னா அப்புறம் எனக்கு சிக்கல் ஆயிடும்” என தன் டூப்பிடம் சொல்லிக்கொண்டிருந்தான் சுப்ரீம் ஸ்டார் சூர்யகாந்த்!….

# சங்கராபுரம் சாய் செந்தில்

“பதினோரு மணிக்கு, கேழ்வரகு கூழ் மறக்காம குடிங்க” என்றாள் பார்வதி, ஃபாஸ்ட் ஃபுட் கடை வைத்திருக்கும் கணவனிடம்.

இன்று வீட்டில் சமையல் செய்ய வேண்டாம், ஹோட்டலில் சாப்பிட்டுக் கொள்ளலாம் என சொன்ன செல்வம், மனைவி, குழந்தைகளுடன் வீட்டு முறை உணவகத்தை தேடினான் கடைவீதியில்.

வெள்ளிக்கிழமை, தன் கடையின் திருஷ்டியை கழிக்க திருஷ்டி பூசணிக்காய் சுற்றி உடைத்தான் திருஷ்டி பொம்மைகள் விற்கும் திருமால்.

ஊர் தாதாவை, மசாஜ் என்ற பெயரில், அடி, உதை என வெளுத்து வாங்கினான், வெள்ளைச்சாமி.

நீண்ட நாட்களாக சேலை வாங்கித் தருமாறு கேட்ட மனைவியை நினைத்து ஏக்கப் பெருமூச்சு விட்டுக் கொண்டே, ஜவுளிக்கடை பொம்மைக்கு புடவை கட்டினான், ஜவுளிக் கடையில் வேலை செய்யும் பன்னீர்.

# 33. கிருஷ்ணகிரி மு.குமரன்

இந்தத் தேர்தலில் மக்கள் நல்ல தீர்ப்பை வழங்குவார்கள் என்று பிரச்சாரம் செய்தவர் தேர்தல் முடிவில் தோற்றுப் போனார்.

பார்சல் சர்வீஸ் லாரியில் மூட்டை தூக்கும் வேலை செய்யும் சண்முகம் வீட்டு குடும்ப சுமையை தாங்க முடியவில்லை என்று புலம்பினார் உடன் வேலை செய்பவரிடம்.

வியர்வை சிந்தி உழைக்கணும் என்று வசனம் பேசிய பிரபல நடிகர் மேக்கப் ரூமுக்கு வந்து ஏசி போடுங்கப்பா... வெயில் தாங்க முடியல என்றார்!

நம்ம கட்சிக்கு சரியா கமிஷன் கொண்டு வந்து கொடுத்தவர் அவர்தான் !அதனால் இந்த முறையும் அவருக்கே சீட்டு கொடுக்கலாம் என்ற தலைவர்!

கம்ப்யூட்டர் வாத்தியாரை பார்த்து சார் பாடத்துல என்ன டவுட் வந்தாலும் இந்த ஆப்பை டவுன்லோட் பண்ணி பார்த்தால் கிளியர் ஆகிக்கலாம் என்றான் மாணவன் சதீஷ்!

## 34. திருவாரூர் கீழை

### அ.கதிர்வேல்

அமாவாசைக்கு காக்கைக்கு சாப்பாடு வைக்க கா..கா..என்று பலமுறை அழைத்தும் வரவில்லை அந்தக் காகம்,அது எங்கோ முதியோர் இல்லத்தில் அன்றும் சாப்பிட்டுக் கொண்டிருந்தது.

‘அச்சுப் பத்திரிகைகள் அழிந்தது ஏன்?’ என்ற ஆராய்ச்சி நூலுக்கு, பி.எடி.எப் கிடைக்குமா என்று தேடிக்கொண்டிருந்தான் தேனப்பன்!

ரேஷனில் நல்ல அரிசியா போடச் சொல்லுங்கையா? என்று அதிகாரிகளிடம் விரட்டிய மந்திரிக்குத்தான் தெரியும் தரக்குறைவான அரிசியை கடத்தி ஒன்றும் மிச்சமில்லேன்னு ட்ரைவர் வந்து சொல்லிச்

சென்றது .

இது தானா சேர்ந்த கூட்டம்னு ஆவேசமாகப் பேசி அமர்ந்த தலைவரின் காதில் ‘பேசின தொகைக்கு பத்து ரூபாய் குறைந்தாலும் ஒருத்தரும் வாங்க மாட்டாங்க’ கிசு கிசுத்தார் காண்ட்ராக்டர் கந்தசாமி.

உறுதி செய்யாத செய்திகளை யாருக்கும் பார்வர்ட் செய்யாதீர்கள் என்று வந்த செய்தியை நாலு குரூப்புகளுக்கும் ஏழு சொந்தக்காரங்களுக்கும் பார்வர்ட் செய்தான் பார்த்திபன்.

# 35. கரியமாணிக்கம் சோழா புகழேந்தி

பேருந்துகளை எரித்து, கடைகளை சூறையாடி, போலீஸ் தடியடியுடன் பொறுப்போடு தலைவருக்கு தொண்டர்கள் இறுதி மரியாதையை செலுத்தினர்.

தலைவரின் நாட்டுப் பற்றென மக்கள் வியக்க, தாய் மண்ணே வணக்கம் எனும் பாடலை மனமுருகி உரத்த குரலில் பாடி முடித்தார் மணற் கொள்ளை அரசியல்வாதி.

சுத்தம் எனக்கு எப்படி சோறு போடும் என்ற கேள்வியோடு “ஸ்மார்ட்சிட்டி” திட்டத்தை திட்டி தீர்த்தபடி வீதிகளை சுற்றியபடி வலம் வந்தான் குப்பை பொறுக்குபவன்.

சாலையில் குடிசை போட்டதால் இடிக்க சொன்ன சட்டம் அங்கே கோவில் கட்டி

முடித்தவுடன் கும்பாபிஷேகம் செய்திட அமைச்சரை அனுப்பி வைத்தது.

எல்லை மீறிய குறும்புத்தனத்துக்கு அன்னை குட்டு வைத்தவுடன் அழுதபடியே வந்து, முந்தானையில் முகம் புதைத்து அடித்தவளிடமே ஆதரவு கேட்டது குழந்தை.

# 36. சென்னை பி. பழனி

எண்பது வயது மகாத்மா காந்தியின் தீவிர ரசிகரான பாட்டி, இந்தத் தலைமுறை தன்னை மதிக்கவில்லை, ஒதுக்குகிறதென, BP/சுகர் மாத்திரைகளை உட்கொள்ளாமல் ஒத்துழையாமையில் உயிரிழந்தார்.

செல்வந்தர் வீட்டுப் பெண்ணைக் காதலித்து போட்டோக்கள், கடிதங்கள், மண சான்றிதழ் என ஆவணங்கள் தயார் செய்து கண் காணாமல் ஓடினர். சாதி வெறியர்களின் முடிவு ஆணவக்கொலை ரூபத்தில் தொடர்ந்தது.

கஷ்டம்னு ஜோசியரிடம் சென்ற ஹீரோவை அவர்களுடைய குலதெய்வ கோவிலுக்குப் போகும்படி யோசனை கூறினார்... பெத்தெடுத்தவங்க குலதெய்வமா,

தத்தெடுத்தவங்க குலதெய்வமா என குழம்பிப் போனார் ஹீரோ!

திருடனைக் கட்டி வெச்சுருக்கோம் வாங்கன்னு கால் வந்ததே ஏன் இன்னும் போகல..அவன் ஸ்டேஷனுக்கு ரெகுலரா மாமூல் கட்டுறவன்... ரிசர்வ் போலீஸ் அல்லது ராணுவ காவலரை அனுப்பலாம்னு யோசனை!

தங்கம் விலை மானாவாரியாக உயர்வு. டிவியில் மின்னியதைக் கண்ட மிடில் கிளாஸ் குடும்பத் தலைவர், அட்சய திருதியைக்கு மனைவி நகை வாங்கித் தர நச்சரிக்க மாட்டாள் என ஆறுதலுற்றார்!
# திருக்கோவிலூர் ம.விருதுராஜா

எப்போதும் டாஸ்மாக் சரக்கை ஃபுல்லாக குடித்துவிட்டு புழுதியில் புரண்டு கொண்டிருப்பவன் ஒருநாள் கள்ளச்சாராயம் குடித்தான்... அவன் குடும்பம் புரண்டு

கொண்டிருந்தது பத்து இலட்சத்தில்.

காந்தி சிலையை சேதப்படுத்தியவனை கண்டுபிடித்து அவன் கை காலை சேதப்படுத்துவேன் என ஆவேசப்பட்டவனால் உடன் சேதமானது மகாத்மாவின் அஹிம்சை.

திருமணத்திற்குப் பின் நடிப்பதும் நடிக்காததும் என் வருங்கால அன்பு கணவரின் விருப்பம் தான் என்ற நடிகை, கணவர் மறுத்தால்...?” என்ற நிருபரின் கேள்விக்கு, “விவாகரத்துக்குப் பிறகு நடிப்பேன்” என சட்டென பதிலளித்தார்.

கடந்த வாரம் இறந்து போன நெருங்கிய நண்பனின் கைபேசி எண்ணில் விரல்பட்டு அழைப்பு போக... “தாங்கள் அழைக்கும் நபர் தொடர்பு எல்லைக்கு அப்பால் இருக்கிறார்” என்ற பெண்மணியின் குரலில் சூட்சுமம் தொனித்தது.

“அம்மா...! கல்யாணத்துக்குன்னு சமைச்சா சோறு நல்லா இருக்குமா...? என் கல்யாணத்திலேயும் சோறு சூப்பரா இருக்குமாம்மா...?” திருமண பந்தியில் சாப்பிட்டபடி தன் தாயிடம் கேட்டாள் தினமும் ரேசன் அரிசி சாதம் உண்ணும் ஆறு வயது சிறுமி.

# வீரன்வயல் வீ. உதயக்குமாரன்

சர்க்கரை முற்றிப்போய் இறக்கும் தருவாயில் இருந்த சர்க்கரை ஆலை அதிபர் சந்தோஷ் தனது கடைசி ஆசையாய்க் கேட்டார் “ஒரு கிளாஸ் கரும்பு ஜூஸ்”

கருவாடு விற்ற பணத்தில் இருந்து பொன்னுத்தாய் தன் மகளுக்கு வாங்கிக் கொண்டிருந்தாள் மைசூர் சாண்டல் சோப்பும் விலை உயர்ந்த வாசனைத்திரவியமும்!

வாக்குத் தவறாமல் தனது கால்வாசிப்

பங்கை உண்டியலில் போட்டுக் கொண்டிருந்தான் அதே கோவில் வாசலில் பிச்சை எடுத்துக் கொண்டிருக்கும் கோபாலன்

திருநீர் மடிப்பதற்காக எடுத்த காகிதத்தைப் பிரித்தவன் வியப்பில் ஆழ்ந்தான். அதில் பிரசுரமாகியிருந்தது “பெரியாரின் சிந்தனைகள்”

“பிடித்தே தீருவேன்”, என்று கங்கணம் கட்டிக்கொண்டு அலைந்து கொண்டிருந்த போலீஸ் அதிகாரி ராம்வேலை என்கவுண்டரில் சுட்டுக் கொன்றான் பேட்டை ரவுடி கபாலி!

# 37. பொறையார் சரஸ்வதி

## செந்தில்

மற்றவர்கள் தவிப்பை உணர்ந்து திருந்தினான்...
தனது தங்க நகையை தொலைத்த திருடன்!

வகுப்பு மாணவர் வரைந்த தனது உருவத்தை
கண்டு பயந்து போனார் ஆசிரியர்...
அவரது கையில் பிரம்பு!

நாத்திகரும் மகிழ்ச்சியுடன் கோவிலுக்கு சென்றார்...
அன்னதானம் வழங்க!

தனது தொப்பையை கண்டு வெட்கப்பட்டார் போலீஸ்காரர்!

கிழவியை கண்டு பேச துடித்தார் கிழவர்...

# 38. வேதாரண்யம்

## மருத.வடுகநாதன்

“கடைசி காலத்துல எல்லாருக்கும் நான்தான் தண்ணி ஊத்தறேன்!” என்று பெருமை பேசினான், பிணம் எரிப்பவன்!

“காலம் கெட்டுப் போயி கிடக்கு... யாராலயும் உடைச்சித் திறக்க முடியாத நல்ல பூட்டு ஒண்ணு வேணும்...” எனக் கேட்டான், வீடு புகுந்து திருடுபவன்!

புதிதாகப் போடப்பட்ட தார்ச்சாலையைப் பார்க்கும் போதெல்லாம் மனதில் எழுகிறது கேள்வி... இந்த ஒப்பந்தக்காரர் எத்தனை லட்சம் சுருட்டியிருப்பார்?

“பூஜைன்னு வேண்டி நம்மைக் காலி பண்ணிடப் போறாங்க!” என, வீட்டில் யாருக்காவது பெரிய நோய்

வரும்போதெல்லாம் பயந்து நடுங்குகிறது ஆட்டுக்கிடா!

“எத்தனைத் துன்பம் வந்தாலும் சகித்துக் கொண்டு இணை பிரியாமல் வாழ்க!” என மணமக்களை வாழ்த்தினார், இரண்டு மனைவிகளை விவகாரத்து செய்தவர்!

# 39. காசாங்காடு வீ காசிநாதன்

யாழினியின் முகத்தில் எப்போதும் புன்னகை மறைந்திருக்கும். அவர் தன் பருவ வயது மகள் இறந்த துயரை எவரிடமும் பகிர்ந்ததில்லை.

நகைக்கடை திருட்டில் கரண் தப்பித்து விட, விக்ரம் போலீஸில் மாட்டினான். நீதிமன்ற விசாரணையின் போது, கரணே பிரதான குற்றவாளியாக அறிவிக்கப்பட்டான். விக்ரமிற்கு விடுதலை கிடைத்தது.

அலுவலக புதிய வரவு ரஞ்சனாவுடன் நெருக்கமாக இருந்த சுமன், மனைவிக்கு மதுவில் விஷம் கலந்து கொடுக்க தீர்மானித்து காரில் புறப்பட்டான். எதிரே மனைவி அனுப்பிய லாரி மோதி பலியானான்.

அருள் வரையும் ஓவியம் உயிர்ப்போடு

இருக்கும். மூன்று மணி நேரத்தில் வெள்ளைப் பன்றி ஒன்றை வரைந்து முடித்து கதவைத் திறந்தவருக்கு அதிர்ச்சி. உண்மையிலேயே கதவருகில் ஒரு பன்றி. உடனே விரட்டினான்.

வடிவேல் கடையில் வாங்கி வந்த ஸ்பெஷல் முருக்கை சாப்பிட சாப்பிட கூடுதல் இனிப்பு... சாப்பிட்டு முடிந்ததும் வாய் முழுதும் இரத்தம்..

# 40. நத்தம் எஸ்.சுரேஷ்பாபு

பத்துவருஷமா இந்த நெம்பர்தான் உபயோகிக்கிறேன்! திடீர்னு நெட்வொர்க்கை மூடிட்டாங்க! வேற நெட்வொர்க் மாற கஷ்டமா இருக்கு! என்றவர் பதினைந்து வருஷமாக தான் இருந்த கட்சியை விட்டு புதுக்கட்சியில் இணைந்தார்.

ரோட்டோரம் பானிப்பூரி வியாபாரம் நன்கு நடந்து கொண்டிருந்தது. வியாபாரம் முடிந்ததும் அன்றைய வசூலை எண்ணி பாக்கெட்டில் வைத்த வட மாநில இளைஞர்கள் ஹோட்டலுக்கு சென்று இட்லி ஆர்டர் செய்தனர்.

அஞ்சு லட்சம் வங்கியில் கடன் வாங்கி மளிகை கடை ஆரம்பித்த அண்ணாச்சி முதல் காரியமாக கடையில் “கடன் அன்பை

முறிக்கும்” என்று எழுதி தொங்கவிட்டார்.

கலப்பு விதைகள் விதைச்சிருக்கேன்! நல்ல விளைச்சல் கிடைக்குமாம். நல்ல லாபம் வரும் என்றவர் மகன் வேறு ஜாதிப் பெண்ணை காதலிக்கிறான் என்றதும் எரிந்து விழுந்தார்.

ஒரு நாளாவது ஸ்கூலுக்கு நேரத்துக்கு கிளம்பறியா? தினமும் லேட்டு! என்ற அப்பாவிடம் நீங்க ஒரு நாளாவது ஆபிஸ்ல இருந்து சீக்கிரம் வீட்டுக்கு வந்திருக்கீங்களா? தினமும் லேட்டு என்றது குழந்தை!
# சென்னை ஸ்ரீநிவாஸ் பிரபு

பக்கத்து இருக்கை பெண்மணியின் ரயில் சிநேகக் கேள்விக்கு “எனக்கு பையன் ஒன்னு, பொண்ணு ஒண்ணுங்க“ என்றாள் செயற்கை முறையில் கருத்தரிக்க மருத்துவமனைக்கு பயணித்திருந்த ராணி.

“நான் வெளியே முக்கியமான மீட்டிங்ல இருக்கேன், அப்புறம் கூப்பிடுங்க“ என்று ராஜா சொன்ன போது, மறுமுனையில் இருந்தவனுக்கு தெளிவாகக் கேட்டது ‘ஏங்க சாப்பிட வர்றீங்களா ...‘ என்ற குரல்.

மார்ச்சுவரியில் குளிர்பதன அறையில், தலையோடு கால் போர்த்திய பிணங்களுக்கு மத்தியிலும் தெளிவாகக் கேட்டது... காவலாளியின் குறட்டை.

எரிவாயு தாக்கி, உடல் கருகி இறந்து போனவரை, போஸ்ட் மார்ட்டம் செய்த பின் எரியூட்டப்பட்டார் எரிவாயு தகன மேடையில்.

சிரித்தபடி இருந்த ராணியின் முகத்துடன் வந்த அழைப்பை பேசி முடித்ததும், ரயில் சிநேகிதம் தானே என்று ராஜா சிவாவிடம், “என் ஒய்ஃப்ங்க“ என்றான். அதே நேரம், ‘ஒய்ஃப் காலிங்“ என்று அதே புகைப்படத்துடன்

வந்தது ராணியின் கணவன் சிவாவிற்கு...

## 41. வேம்பார் மு.க.இப்ராஹிம்

“மகனின் திருமணத்திற்கு வந்தவர்கள் அனைவருக்கும் போன்சாய் மரங்களை அன்பளிப்பாய் வழங்கினார் வனத்துறை அமைச்சர் தண்டபாணி. .!”

“ஆன்லைன் விளையாட்டு கொஞ்சம்... கொஞ்சமாக அடிமைப் படுத்தி உயிரைப் பறிக்கும்”... எனப் பற்ற வைத்த சிகரெட்டை, குடித்தபடி மகனிடம் சொல்லிக் கொண்டிருந்தார் அப்பா..!”

வீட்டு வேலைக்காரியின் குழந்தையிடம், “கேம் விளையாட உனக்கு செல்போன் தாரேன்... எனக்கு ஹோம்வொர்க் செய்து தர்றீயா?” எனக்கேட்டது முதலாளி வீட்டம்மாவின் குழந்தை நவ்ஷீன்..!”

”குடிநீர் கேட்டு காலிக்குடங்களுடன்

சாலை மறியல் பண்ணிய பெண்களைத் தண்ணீரைப் பீச்சியடித்துக் கலைத்துக் கொண்டிருந்தனர் காவல் துறையினர்..!

“நான் சிறுவனாக இருக்கும் போது, ஊருக்கு வெளியில பெரிய ஏரி இருந்துச்சு…”எனத் தாத்தா சொன்னவுடன், “நான் படிக்கிற கல்லூரியைச் சொல்றீங்களா தாத்தா.?” என்றான் பேரன்..!”

## 42. கோவை. நா.கி.பிரசாத்

“எப்பப் பார்த்தாலும் அடுத்தவங்களுக்கு அட்வைஸ் பண்ணாத! அது ரொம்ப தப்பு...!” என்றான் நண்பனிடம் பிரபு.

“சிங்கத்தின் வாயில் தலைவிட்டு சாகசம் செய்த சர்க்கஸ் வீரர் பயந்து தலைமறைவானார் எதிரே கடன்கொடுத்தவர்...!”

கோவில் தேரை முன்னின்று இழுத்த தொகுதி எம்.எல்.ஏவை காட்டிக் கொடுத்தது ஊழலில் போட்ட ரோடு!

“ஷாட் ரொம்ப அழகா வந்திருக்கு...!” என டைரக்டர் சொன்னதும் பூரிப்புடன் தனது பேய் வேஷத்தை களைத்த ஹீரோயினை பார்த்து பயந்தே விட்டார் டைரக்டர்!

“தத்ரூபமாய் நடித்துக் கொடுத்தனர்

துணை நடிகர்கள் கொத்தடிமைகளாய்!”

# 43. மடிப்பாக்கம் லட்சுமி

## ஆவுடைநாயகம்

“விவசாயி மழைக்காக வேண்டும் போது ஐஸ்கிரீம் விற்கும் அவரது மகன் வெயிலுக்காக வேண்டினான்.”

“அன்று டெஸ்ட் டியூப் மூலம் பிறந்த குழந்தை இன்று யூ டியூப்புக்கு அடிமையாயிருக்கிறது.”

“நியூரோ ஸ்பெஷலிஸ்ட் நடராஜனின் தலைவலி போக சுக்கை அரைத்து நெற்றியில் பற்று போட்டாள் பங்கஜம் பாட்டி.”

” ஆபத்து வரும் முன்பே தன்னை காப்பாற்றி வரும் கண்ணுக்குத் தெரியாத தேவதையிடம் என் கல்யாணத்தன்று எங்கே போயிருந்தாய் என்று கேட்டான்.”

“பஸ்ஸில் தள்ளாடும் முதியவருக்கு சீட் கொடுத்து தன் ஊன்றுகோலின் உதவியால் நின்று கொண்டான் கால் ஊனமுற்ற இளைஞன்.”

# 44. தஞ்சாவூர் அய்யாறு

ச.புகழேந்தி

வரி... வரியாய் வரலாற்று நாவல் எழுதிய கை இன்னிக்கு சிங்கிள் வரி சிறுகதைக்கே சிங்கியடிக்கிது என்று அங்கலாய்த்துக் கொண்டார் கதாசிரியர்.

இனி நாம் யாரும் 'போக்சோ'வில் கைதாகி விடக்கூடாதென்று சாமியார்கள் ஒன்று கூடி புத்தாண்டு சபதம் எடுத்துக் கொண்டார்கள்.

மீண்டும் பஜ்ஜி மாவுக்கு வேலை வந்துவிட்டது! என்று அலுத்துக்கொண்டே அடுப்படிக்குச் செல்கிறாள் பெண்ணைப் பெற்றவள்.

புத்தாண்டாவது நாம், முகத்தில் முகம் பார்ப்போமா?
என்று 'முகநூலில்' கேட்டார் பக்கத்து

வீட்டுக்காரரர்.

“இப்ப எல்லாம் என்ன டியூன் போடுறாங்க!..பாட்டுப்பாடுனா பத்துக்காசுக்கூட கிடைக்க மாட்டேங்குது!..” என்று அங்கலாய்த்துக் கொண்டான் ரயில் வண்டியில் கையேந்துபவன்.

# 45. திருச்சி ப்ரணா

சுதந்திர தினத்தை கோலாகலமாக கொண்டாடினர், சிறைச்சாலை கைதிகள்.

இன்னும் ரெயில் புறப்பட இரண்டு நிமிடமே உள்ளது என்ற தவிப்பில், போக்குவரத்து நெரிசலில் இருந்த படியே கை கடிகாரத்தை மீண்டும் மீண்டும் பார்த்து தவித்துக் கொண்டிருந்தார், ரெயிலை இயக்க வேண்டிய இஞ்சின் டிரைவர்!

செல்ஃபி எடுக்கும் போது விபத்தில் இறந்தவன் எமலோகம் சென்றவுடன் பரபரப்பாய் மொபைலை தேடினான், எமதர்மனுடன் ஒரு செல்ஃபி எடுக்க!

“இனிமே ஆண்டவன் தான் காப்பாத்தணும்” என்ற டாக்டர், ஃபீஸை மட்டும் தன் பெயரில் வாங்கிக் கொண்டார்!

“சுத்தம் சோறு போடும்” என்று பள்ளியின் கரும் பலகையில் எழுதிய ஆசிரியர், உடைந்த சாக்பீசை வகுப்பின் ஓரத்தில் விட்டெறிந்தார்!

## 46. திருச்சி கு.வைரச்சந்திரன்

கடன் சுமையால் வீட்டை விற்றவன் கடைசியாய்
அந்த வீட்டுடன் நின்று ஒரு செல்ஃபி எடுத்துக் கொண்டான்

ஆயிரம் கோடி ஊழல் செய்த அரசியல்வாதியை திட்டுகிறான் ஆயிரம் ரூபாய் வாங்கி கொண்டு ஓட்டுப்போட்ட வாக்காளன்

அழிக்க முடியாமல் தோற்றுப்போகிறது மழை அபார்ட்மெண்ட் வீட்டு வாசலில் ஒட்டியிருக்கும் ஸ்டிக்கர் கோலத்தை!

கூண்டு கிளி விற்கும் பெண்ணிடம்
பேரம் பேசுகிறார் கிளி ஜோசியர்!

ஆவியோடு பேசுவதாய் சொல்பவர்களும் கைப்பேசி வைத்திருக்கிறார்கள்

# 47. சென்னை

## என்.கே.பாலசுப்ரமணியன்

பார்வையற்றவனாக நடித்துக் கொண்டிருந்த ஹீரோ, தன்னை பார்க்கும் பார்வையே சரியில்லை என ஷூட்டிங் ஸ்பாட்டில் புலம்பிக் கொண்டிருந்தாள் புதுமுக ஹீரோயின் புனிதா.

“தாய்மொழி எது?” என்ற கேள்விக்கு வாடகைத்தாயின் மொழியைப் போடுவதா, வளர்க்கும் தாயின் மொழியைப் போடுவதா என புரியாமல் குழம்பினான் பள்ளிக்கூட விண்ணப்பத்தை நிரப்பிக்கொண்டிருந்த பரத்.

ஹிந்தி தெரிந்த என் தம்பியிடம் “உங்க அண்ணன் படிக்காத பாமரனோ?” என அனுதாபமாக விசாரித்தானாம் பானிப்பூரி விற்பவன், அவன் ஹிந்தியில் கேட்ட

கேள்விகள் புரியாமல் நான் விழித்ததால்!

எத்தனையோ முயன்றும் தனக்குத் தெரியாமல் தன் சட்டைப் பாக்கெட்டிலிருந்து பணத்தை எடுக்கும் மனைவியை கையும், களவுமாக பிடிக்கவே முடியவில்லை அந்த போலீஸ்காரரரால்!

“பொண்ணை சீக்கிரம் வரச் சொல்லுங்கோ! முகூர்த்தத்துக்கு நேரமாச்சு!” என அவசரப்படுத்தும் புரோகிதர் போல, சாந்தி முகூர்த்தம் தாமதமாவதை சுட்டிக்காட்ட யாருமே இல்லையே என ஏங்கினான் பள்ளியறையில் புது மனைவியின் வரவுக்காக ஆவலுடன் காத்திருந்த கார்த்திக்.
# திருப்பூர் செ.ந.வடிவேல்

கடன் வாங்கி குடும்பம் நடத்தினார் பேங்க் “கேஷியர்”.

தன்னை குறையோடு படைத்த கடவுளை,

குறையில்லாமல் சிற்பமாய் செய்து முடித்தான் “மாற்றுத்திறனாளி சிற்பி”.

அவசர ஊர்தியில் எழுதப்பட்டிருந்த வாசகம் :
“மித வேகம் மிக நன்று”.

லஞ்சமாக கைமாறிய பணத்தில், புன்சிரிப்புடன் “மகாத்மா காந்தி”.

# 48. வேதாரண்யம்

## ந.விஜய்ஆனந்த்

ஒரு புதிய சைக்கிள் வாங்கி விட வேண்டும் என்ற பள்ளிப் பருவ கந்தனின் பல வருட ஆசை நிறைவேறியது பள்ளிக்கு செல்லும் தன் மகனுக்கு சைக்கிள் வாங்கிய பொழுது.

வீட்டுக்குள் மழைநீர் புகுந்து அனைவரும் தத்தளித்த இக்கட்டான நிலையில் மூன்று வயது மகள் அழைத்தாள் “வாங்க எல்லோரும் என் கப்பலில் ஏறி தப்பிச்சிடலாம்”.

உறக்கத்திலிருந்து விழித்த குழந்தை தன் படுக்கையில் காற்று போய் சிறுத்துக்கிடந்த பலூனை பார்த்ததும் கவலையுடன் கேட்டாள், தன் தாயிடம் “அம்மா குட்டி பலூன் பொறந்ததும் அம்மா பலூன் செத்து போச்சுதாம்மா?”.

வீட்டை சுத்தம் செய்கையில் கிடைத்த எனது பள்ளி பருவ புத்தகத்தை நான் ஆவலுடன் புரட்டிக் கொண்டிருந்த பொழுது அருகில் வந்த எனது மகள் கேட்டாள் ” என்னப்பா மயிலிறகு குட்டி போட்டிருக்கா?!”.

தானே இசைத்துக் கொண்டு தன் தேன் குரலால் பாடல்களை பாடி பலரையும் ரசிக்க வைத்த பார்வையற்ற கண்ணன் ரசித்தான் தான் வைத்திருந்த தட்டில் விழும் சில்லறைகளின் சப்தத்தை சங்கீதமாக!.

# 49. மதுரை முருகேசன்

தனது கைக்குழந்தையைத் தூக்க அலுத்துக் கொண்டான், ‘பளு தூக்கு’ சாம்பியன்.

பழக்கடைக்காரரர் குடித்த, சத்து மருந்து பாட்டில் லேபிளில், மொத்த பழவகைகளின் படம் ஒட்டியிருந்தது.

மெகா சீரியல் டைரக்டர் மேகநாதன், தேர்ந்தெடுத்தார்... பரிசுக்குரிய , ’ஹைக்கூ’வை.

தனது ஞாபக மறதியில், பல் செட் பொருத்த மறந்தார், பல் டாக்டர்.

நீண்ண்ட நேரம் பேசினார்கள்... அமைதி ஊர்வலத்தில், எப்படி நடந்து கொள்ள வேண்டுமென்று...

# 50. தஞ்சாவூர்

## ராம்ஆதிநாராயணன்

“நேத்து ஹைவேஸ் ரோட்டுல ரொம்ப வேகமா பைக் ஓட்டி சாகசம் செஞ்சவன் இவன் தானே?” என்று பேசிச் சென்றார்கள் ‘கண்ணீர் அஞ்சலி’ போஸ்டர் பார்த்து.

‘வேலை முடிந்ததும் எங்கே வெளியே போகலாம்?’ என அலைபாய்ந்து கொண்டிருந்தது ‘ஒர்க் ஃப்ரம் ஹோமில்’ இருந்த ஆகாஷின் மனசு.

“அட்ஜஸ்ட்மெண்ட்டுக்கு அழைத்தார்!” என்று சீனியர் பெண் இயக்குநர் மீது புகார் கொடுத்தார் இளம் வில்லன் நடிகர்.

“காம்பெடிஷனுக்கு ஏன் இப்படி மொட்டை அடிச்சுட்டு வந்திருக்கே?” என்று கேட்ட கோச்சிடம், “50 கிராம் கூட தகுதிக்கு பிரச்னை

ஆயிடக்கூடாதே சார்!” என்று நக்கலாகச் சொன்னார் பளு தூக்கும் வீராங்கனை.

“சிசிடிவி வேலை செய்யாத ஏதாவது ஒரு பெரிய கோவில் உண்டியலைக் கண்ணுல காட்டு பிள்ளையாரே!” என்று சின்னக் கோவில் பிள்ளையாரிடம் வேண்டினான் உண்டியல் திருடன்.

# 51. இடைப்பாடி ஜெ.

## மாணிக்கவாசகம்

இறந்து நடு வீட்டில் கிடத்தப்பட்டிருந்த அம்மாவின் மருந்து மாத்திரைகள் இன்னும் காலாவதியாகவில்லை.

கட்சி கொடியை அறிமுகப்படுத்தியவுடன் ரசிகனுக்கு ஞாபகத்தில் வந்து போனது ஹீரோயினின் பாவாடை தாவணி முகம்!

வீட்டின் வெளியே மாட்டியிருந்த கந்தப்ப ______ ன் பெயர் பலகையில் இருந்த ஜாதி கொஞ்சம் கொஞ்சமாக அவரின் பெயரை அரித்துக்கொண்டிருந்தது.

‘பேய் பிசாசு மேலயெல்லாம் எனக்கு நம்பிக்கை இல்லை’ என்றது விஜயா உடம்பில் புகுந்திருந்த கமலாவின் ஆவி.

“தண்ணி அடிச்சவங்க பக்கத்துல வந்தா எனக்கு வாந்தி வந்துடும்..” என்ற பாலுவின் விரலிடுக்கில் சிகரெட் புகைந்து கொண்டிருந்தது.

## 52. தூத்துக்குடி ஜெரி. .டார்வி

தொகுதி பக்கம் செல்ல கூகுள் மேப்பை தேடினார் எம்.எல்.ஏ!

தனது ஹிட் படத்தை ரீ ரீலீஸ் செய்து இருப்பை புதுப்பித்துக் கொண்டார் பழம் பெறும் நடிகர்.

மோட்டிவேஷன் ஸ்பீச் கொடுக்கும் பேரனுக்கு வழக்கில் இருந்து தப்பிக்க ஐடியா கொடுத்தார் அப்பத்தா...

விநாயகர் சதுர்த்தி அன்று கொழுக்கட்டையுடன் கையும் களவுமாக கூண்டிற்குள் பிடிபட்டது எலி.

திருடியதும் தாமதிக்காமல் மாமூலை ஆன் தி ஸ்பாட்டில் கொடுத்ததற்கு கோபப்பட்டார் போலீஸ்காரர்.

## 53. வேலூர் எல். மாறன்

எத்தனை கிடா வெட்டியும் காவல்முனியின் இரத்தவெறி அடங்கவே இல்லை என்று கூறுகிறான் ஊன் உண்ணும் மனிதன்..!

கங்கையில் ஆரம்பித்து பல மாநிலங்கள் வழியாக காவிரியில் சட்டென்று இணைத்தாள் சிறுமி. புதிய நீர்வழிப்பாதை உருவானது இந்திய வரைபடத்தில்...!

பஸ் பயணத்தில் கம்பியில் சிக்கி ரவிக்கை கிழிந்தும் கூச்சப்படவேயில்லை... புறமுதுகை மறைத்தது டாட்டூஸ்...

கல்வி அனைவருக்கும் சமம் என்பதை விளங்கிக்கொள்ள முடியவில்லை அப்புறம் எதுக்கு இட ஒதுக்கீடு?

மதுவை ஒழிப்போம் என்ற கட்சி தேர்தலில் தோற்று மண்ணை கவ்வியது.

## 54. செ.புதூர் எல்.இரவி

‘அர்ச்சனை யார் பேருக்கு?’-என்ற குருக்களிடம்..’
சுவாமி பேர்க்கு ’.. என்றான்...சிலை கடத்தல் மன்னன் சிலம்பரசன்.

ஊர் பண்ணையார் இறந்த செய்தியைக் கேட்ட சுந்தரம்..நிறைய பூக்களை வாங்கிக் கொண்டு வந்து, மாலையாகக் கட்டித் தன் கடையில் தொங்க விட்டான் இன்றைய விற்பனைக்கு.

சிறையில் அடைக்க வேண்டிய பிரபல ரவுடிகளை சுதந்திரமாய் நடமாட விட்டுவிட்டு, சுதந்திரமாய் திரிய வேண்டிய கூண்டுக்கிளிகளிடம் கொஞ்சிக் கொண்டிருந்தார் ஏ.சி.பிரபாகர்.

பிராய்லர் கோழி முட்டைகளை ட

தூள் சாயத்தில் நனைத்து நாட்டுக்கோழி முட்டை’என விற்று வந்த முஸ்த்தப்பா’வுக்கு முதல் குழந்தை ஊனமாய் பிறந்தது.

டிவியில் பட்ஜெட் கூட்டத்தொடர் செய்தியை பார்த்துக் கொண்டிருந்த பரந்தாமன்...’அடுத்த மாசத்திலிருந்து டிவி கனெக்சனை நிறுத்தி விடு’என்றான் மனைவி கனகாவிடம்...!

# சென்னை எஸ்.ராமன்

பேரன் தீபாவளி ராக்கெட்டை பயமின்றி பத்த வைத்தபோது, பயந்து உள்ளே ஓடினார் நிஜ ராக்கெட் விஞ்ஞானி.

‘உங்க ஜாதகப்படி இந்த ஜென்மத்தில் கல்யாணம் ஆக சான்ஸ் இல்லை’ என்று சொன்ன ஜோசியரின் பெண்ணையே கணக்குப் பண்ணி கல்யாணம் செய்து கொண்டான் கல்யாண ராமன்.

”வெடி வைத்து அந்த அடுக்குமாடி கட்டடம் தகர்க்கப்படுவதற்கு முன்பு, ஒரு செல்ஃபி எடுத்துக்கொள்வதற்கான அனுமதிக்கு கெஞ்சினார், கடன் பட்டு, அதில் ஒரு ஃபிளாட் வாங்கியிருந்த கிருஷ்ணன்.

”இன்னைக்கு இருநூறு ரூபாயாவது வசூல் ஆகணும் என பிச்சைக்காரரும், புது படத்திற்கு முதல் நாள் இருபது கோடியாவது வசூல் ஆகணும் என தயாரிப்பாளரும் கோவிலில் ஒரே சமயத்தில் வேண்டி நின்றனர்.

டி.வியில் மூழ்கி இருந்தபோது, அடுப்பில் கவனிக்காமல் தீய்ந்த உப்புமாவுக்கு ‘சீரியல் உப்புமா’ என்று பெயரிட்டு கணவனுக்கு கொடுத்தாள் உமா!

## 55. நீடூர் அ.முஹம்மது நிஜாமுத்தீன்

‘அம்மா’ என்று அழுதது குழந்தை தொட்டிலில்.

“என்னம்மா!” என்று அன்போடு ஓடி வந்து கேட்டாள் அந்த குழந்தையின் அக்காள் சிறுமி. ’இவளும் நமது அம்மாதான்” என்று அமைதியானது குழந்தை!

“கத்தியை தீட்டாதே! புத்தியை தீட்டு!” என்று சொன்னார் சலூன் கடைக்காரர் அப்பா. பையன் கடையின் பெயரை மாற்றினான் ‘ஹைடெக் அழகு நிலையம்’ என்று.

தீபாவளிக்கான புத்தாடைகள், பலகாரங்கள் அடங்கிய பையை, தான் தூக்காமல் தன் மனைவியை தூக்கி வரச் செய்தார் பொதுவுடமை கட்சியின் வாகன

ஓட்டுநர்.

“டேய் ஹோம் ஒர்க் செய்யலையாடா?” என்று ஆசிரியர் கேட்டார். “நோட்புக்ல மட்டும் செய்யல சார்! மத்தபடி வீட்ல எல்லா வேலைகளையும் செஞ்சிட்டேன் சார்!” என்று சொன்னான் பையன்.

“அவர் பெரிய ஹீரோ! அவரை செருப்பால் அடிக்கிற மாதிரி நடிக்க மாட்டேன் சார்!” சொன்னாள் நடிகை அபிநயஸ்ரீ. நேற்றுதான் அந்த நடிகர் மேல் பாலியல் குற்றச்சாட்டு எழுதி, புகார் செய்திருந்தாள் காவல் நிலையத்தில்.

# 56. தக்கலை லீலாராம்

எழுதப் படிக்கத் தெரியாத ஏகாம்பரத்தின் காய்கறிக் கடையில் விலைப்பட்டியலோடு தொங்கின பல சிலேட்டுகள்.

மூடநம்பிக்கைக்கு ஆளாகாதே என்று மகனிடம் உரைத்து விட்டு சகுனத்திற்காக எதிர்பார்த்து நின்றார் சைக்கிளில் செல்ல தந்தையார்.

எப்பவுமே தொழிலில் சுத்தம் வேணும் என்று சொல்லும் சுந்தரம், விற்பதற்காக கறந்து வைத்த பாலில் தண்ணீரைக் கலந்து கொண்டிருந்தார்.

மின்கலம் மாற்றாத சுவர்க் கடிகாரத்திற்கு நேரமே போகவில்லை.

மாலை முழுதும் விளையாட்டுன்னு சொன்ன பாரதியார்

இரவு முழுதும் படிக்கணும்ணு சொல்லலையே என்று வாதிட்டான் இலக்கியவாதியின் மகன்.

## 57. கிருஷ்ணகிரி ப. கோபி

கடன் ‘வாங்கி’ கழிக்கும் கணக்கில் தவறு செய்தான் பஜன்லால் சேட் மகன் முன்னா லால்.

எரிந்து விழும் குணம் கொண்ட அப்பா மரணத்திற்கு பின் வைத்த கொள்ளியில் உடனே எரிந்து சாம்பலானார்.

கெட்டி மேள மங்கல வாத்திய ஒலி நாராசமாய் கேட்டது முதிர்கன்னிக்கு.

பால் கிடைக்காத கன்று ஏக்கத்துடன் பார்க்கிறது ‘மில்க் ஷேக்’ குடிக்கும் மனிதனை.

முதியோர் இல்லத்தில் விட்டுச் சென்ற மகனுக்கு மறுநாள் போன் செய்து பிறந்தநாள் வாழ்த்து கூறினார் தாய்.

# 58. நந்து சுந்து

திருமணப் பட்டுப் புடவை செலக்ட் செய்ய கடைக்குப் போனது நாலு பேர் தான் என்றாலும் வாட்ஸ் அப்பில் இருபது பேர்.

ஊழல் குற்றச்சாட்டில் பார்த்திபனை கைது செய்ய சென்னை விரைந்தது போலீஸ் - டி.வியில் செய்தியைப் பார்த்துக் கொண்டிருந்தார் பார்த்திபன், லண்டலினிருந்து.

“கிரைண்டர் வாங்கினதுக்கு தவணை கட்டிட்டு வரப்ப இட்லி மாவு வாங்கிட்டு வந்துடுங்க” என்றாள் மனைவி

“வீட்ல கார்பெண்டரி வேலை நடக்குதா? ஸ்பீக்கர்லே பலமா ஹிந்தி பாட்டுக் கேக்குதே?” என்றார் பக்கத்து வீட்டுக்காரர்.

“ஒரு நல்ல ஃபேமிலி சப்ஜெக்ட். ஹீரோ

மும்பைல தாதா" என்று ஆரம்பித்தார் கதாசிரியர்.

## 59. கள்ளக்குறிச்சி க. கோகுல பிரகாஷ்

ஐந்தில் வளையாதது, ஐம்பதில் வளையாது என்னும் பழமொழியை கேட்டதும், வாய் விட்டு சிரித்தாள் கூன் விழுந்த பாட்டி.

மாற்றம் ஒன்றே மாறாதது என்று வருத்தத்துடன் மாணவர்களுக்கு சொல்லிக் கொடுத்துக் கொண்டிருந்தார், விருப்பமேயில்லாமல் பணியிடமாற்றம் பெற்ற ஆசிரியர்.

எனக்கு இருந்த ஒரே தோஷமும் இப்போ இல்லை என புலம்பிக் கொண்டிருந்தார், கல்யாணத்துக்கு பிறகு சந்தோஷத்தை இழந்த புது மாப்பிள்ளை.

வள்ளலாரின் கோட்பாடுகளால் ஈர்க்கப்பட்ட கோபால், தன் கறிக்கடைக்கு,

அவரது பெயரையே வைத்தான்.

பழைய காதலியின் நினைவுகள் முற்றிலும் மறந்து போக வேண்டும் என கடவுளிடம் வேண்டியவன், தன் கடவுச் சொல்லை மறந்து கஷ்டப்பட ஆரம்பித்தான்.

# 60. தருமபுரி ஆதி.

## சௌந்தரராஜன்

“வீட்ல ஒரே பிரச்சினை.. கொஞ்ச நேரம் அந்த டீ ஷாப்பிற்கு வர்றீங்களா.. உங்ககிட்ட பேசினா மனசுக்கு ஆறுதலா இருக்கும்..!” அலைபேசியில் நண்பனை அழைத்தார் பிரபல மனநல மருத்துவர் ரிங்கேஷ்.

அவசர சிகிச்சை பிரிவில் வைத்து சிகிச்சை பெற்று வரும் நண்பனை, அடுத்த மாதம் சென்று பார்த்துவிட்டு வந்தால் போகிறது..! மனதில் நினைத்துக் கொண்டான் சீரியல் இயக்குநர் சில்பந்தர்.

‘அப்பா ஒரே தலைவலிப்பா..’ என்ற மகளிடம்.. ஒரு டம்ளர் காபி சாப்பிட்டு ‘பாரா’ ஒண்ணு போட்டு படும்மா.. என்றவர், டாக்டர் ஒரே தலைவலி என்றவரிடம் ‘ஒரு ஸ்கேன்

பார்த்திடலாமே’.. என்றார்.

நாளும் அன்பை போதிக்கும் பணியில் ஈடுபட்டு வந்த அறிவன், அன்று மட்டும் தாமதமாய் வந்த ஓட்டுநரிடம் எரிந்து விழுந்தார்.

இயற்கையை அழிக்க நினைக்கும் செயல்களை ஒருபோதும் அனுமதிக்க முடியாது, பேட்டி முடிந்ததும் குவாரிக்கு வண்டிய விடுப்பா.. என்றார் அமைச்சர் அங்குசம்.

## 61. திருச்சி ஸ்ரீரங்கம்

மருத்துவரின் மனைவி பள்ளிவாசலுக்கு மகனுடன் ஓடுகிறாள் மந்திரிப்பதற்காக அவன் எதையோ பார்த்து பயந்து விட்டான் என்று.

ஆற்றுக் குளியல் பிடிக்கவில்லை என்கிறது சாக்கடையில் புரண்டு பழகிய பன்றி.

தன்னை வெட்டத் துடிக்கும் கசாப்பு கடைக்காரரை கருணையுடன் பார்க்கிறது ஓரத்தில் கட்டப்பட்டிருக்கும் வெள்ளாடு.

எடைக்குத் தான் நான் பொறுப்பு, தரத்திற்கு அல்ல என்கிறது தராசு.

கலெக்சன் குறைந்தால் அர்ச்சகருக்கு வீட்டில் காத்திருக்கிறது அர்ச்சனை.

# 62. திருவண்ணாமலை

## ந.சண்முகம்

பள்ளிக்கு நேரமாச்சு என பரபரப்புடன் செயல்பட்டு நான்கு பைகளை எடுத்துக் கொண்டு பள்ளியின் அருகில் சென்று தன் திண்பண்ட கடையை பரப்பினான் வேலன்

பெற்று வளர்த்தவர்களை முதியோர் இல்லத்தில் சேர்த்து விட்டு அந்த ஊரில் உள்ள தாயுமானவர் கோவிலுக்கு சாமி கும்பிட விரைந்தார் அண்ணாமலை

கிராமத்தில் பொன் விளையும் பூமியான ஐந்து ஏக்கர் நிலத்தை விற்று விட்டு நகரத்தில் வீடு கட்ட 1800 சதுர அடி காலி மனையை வாங்கினார் முத்தன் .

வள்ளலார் விழாவில் மது மாமிசம் இவைகளை உண்பது பாவம் என்று பேசிய

பேச்சாளர் வீட்டில் மது குடித்துவிட்டு சிக்கன் கறி சாப்பிட்டு கொண்டிருந்தார் ..

தன் மகளுக்கு நல்ல வரன் கிடைக்காமல் திண்டாடி வரும் திருமண அமைப்பாளருக்கு சமுதாயத்தில் சிறந்த அமைப்பாளரென்று சிறப்பு பெயர் இருக்கின்றது

## 63. நெய்வேலி

### சுப்ரமணியபாண்டியன்

பேரப்பிள்ளைகளையெல்லாம் மாலுக்கு அழைத்துக்கொண்டுப் போய் காட்டுகிறார் தாத்தா.
தான் விளையாடிய விளையாட்டுகளை...

மனைவியிடம் எதிர்வாதம் செய்யமுடியாமல் அமைதியாகிப்போகிறார் பட்டிமன்ற பேச்சாளர்

தங்கமான பெண் என்று பெயரெடுத்தாள் கவரிங் கடைக்காரரர் மகள்.

இரண்டாவது முறையாக தொகுதி மக்களை சந்தித்தார் அமைச்சர் தனது வீட்டு வைபவத்தில்

துணிக்கடையை திறந்து வைக்க

வருகிறார்

கவர்ச்சி நடிகை

# 64. மதுரை ரகுநாத் வ

கல்குவாரியில் பணிமுடித்து வீடு திரும்பியவனிடம் ஓடிவந்த மகள் மேகங்கள் நிறைந்த மலையொன்றினை வரைந்து நீட்டுகிறாள்.

மணலால் நிரம்பிய குளத்தில் கட்டப்பட்ட பத்து மாடி அடுக்ககத்தின் தரைதளத்தில் முதலில் நுழைகிறது
வாஸ்து மீன்.

வெறித்துக்கொண்டிருந்த தட்டில் விழுந்த ஒற்றை
நாணயத்தின் ஒலியால் சிதறுகிறது யாசகனின் உறக்கம்.

ச்சீ...போவென விரட்டியபின்பும் கால்களை வளைய வந்துகொண்டிருக்கிறது அவளது அன்பு.

கணக்குத் தேர்வில் நூறு மதிப்பெண் வாங்கிய
அன்று தாத்தா கொடுத்த ஐந்நூறு ரூபாயினைத் தொலைத்திருக்கிறான் முத்து.

## 65. சங்கராபுரம் ச.மணிவண்ணன்

தன்னை பற்றி தெரிந்து கொள்ள AI தொழில்நுட்பத்தில் பெயர் உள்ளீடு செய்தார் அரசியல்வாதி சூனாபானா. வந்த தகவல்களைப் பார்த்தார். முதன் முதலில் சிறை சென்றதிலிருந்து அவர் மீதுள்ள குற்ற வழக்குகள் விவரம் வரை தந்தது.தலை சுற்றி போனார்.

தெருவில் உள்ள ஏழு வீட்டு செய்திகளை வேலைக்காரி சொல்ல ரசித்து கேட்டுக் கொண்டிருந்தாள் பிரபல டிவியின் செய்தி வாசிப்பாளர் ரம்யா கிருஷ்ணன்.

இது உங்கள் சொந்த கதையா? என்று பிரபல நடிகர் கேட்க,“ஆமாம்”என்றான் கதையாசிரியர். “கொரியன் படம் ஏதாவது பார்த்து கதை எழுதி வாங்க. வாய்ப்பு தரேன்”

என்று சொல்லி விட்டு நகர்ந்தான் பிரபல நடிகர் பாபு.

தமிழில் அர்ச்சனை செய்தவர், “பெயர் சொல்லுங்க!”எனக் கேட்க ஒவ்வொருவராக தங்கள் சமஸ்கிருதம் கலந்த பெயரைச் சொன்னார்கள்.

“சார்! கோயில்ல இன்னைக்கு கூட்டம் வரல. மாலை கட்டியது எல்லாம் விக்கல! வியாபாரம் டல்லடிக்குது!” புலம்பினார் சர்தார் பாய்.

# 66. கோவை புதியவன்

அர்த்தநாரீஸ்வர் கோவிலில் அபிசேகத்துக்கு ஏற்பாடு செய்தனர் திருநங்கையாக மாறிய மகனை விரட்டிய குடும்பத்தினர்.

இலவசத்திற்கு முண்டியடித்த கூட்டத்தைப் பார்த்து கேலியாய் சிரித்தான் பிச்சைக்காரன்.

முதன்முதலாய் பள்ளிக்கூட வாசலை அச்சத்தோடு மிதித்தார் படிக்காத காவலாளி

இருமிக் கொண்டிருந்த தனக்கு மருந்து கொடுத்தவளிடம் கேட்டாள் குட்டி மகள் “தாத்தாவை மட்டும் ஏம்மா திட்டற?”

நகைக்கடை விளம்பரத்தில் நடிப்பதற்கு நடிகை சொன்ன சம்பளத்தைக் கேட்டு கறுத்துப்போனது கடைக்காரரர் முகம்

# 67. மயிலாடுதுறை கவிஞர்

## லிடியா இம்மானுவேல்

காட்டை அழித்து பிளாட் போட்டு விற்ற ,” பிளாட் புரமோட்டர் ” தன் பெண்ணின் திருமணத்திற்கு வந்தவர்களுக்கு, மரக்கன்றுகளை பரிசாக அளித்தார் !

அடிதடியில் தொடங்கிய அந்த ஊர் திருவிழா !, கறி விருந்தில் சமாதானமாக முடிந்தது !

மார்கழி பனியில், நடை பாதையில், தாயுடன் உறங்கும் குழந்தை ஒன்று குளிரில் நடுங்குகின்றது !, பழக்கடையில் ஆப்பிள்கள், “ஸ்வெட்டர்” போட்டிருக்கின்றன !

ஏலம் விடப்பட்ட , அந்த வீட்டின் வரவேற்பு அறையில் இருந்த குபேர பொம்மை ! , எல்லோரையும் ஏளனப் புன்னகையுடன்

வரவேற்கின்றது !

திருவிழாவில் காணாமல் போன பொம்மை !, தன்னைத் தேடி வரும் குழந்தைக்காக காத்திருக்கின்றது !

# 68. தஞ்சாவூர் பா து பிரகாஷ்

திட்டமிட்டபடி அந்த பங்களாவுக்குள் நுழைந்து, குரைத்த நாயை வாலாட்ட வைத்து, லாவகமாக லாக்கரை திறந்து பணம், நகைகளை கொள்ளையடித்து வெளியே வந்த தினேஷ் அதிர்ச்சியடைந்தான், தான் ஓட்டி வந்த காரை காணாததால்!

பிரபல தொழிலதிபர் சர்மா விலையுர்ந்த காரில் படுஸ்டைலாக இறங்கி உள்ளே சென்று கைநாட்டு இட்டு வெளியே வந்தார், பத்திரப்பதிவு அலுவலகத்திலிருந்து!

ஏடிஎம்மில் பணம் எடுத்து பாக்கெட்டில் வைக்கும்பொழுது ஒரு நோட்டு தவறி கீழே விழுந்ததை எடுத்து, ஓட்டலுக்குள் சென்று உரியவரிடம் கொடுத்த பிச்சைக்காரரை கைகுலுக்கி, “யூ ஆர் அபாயிண்ட்மெண்டட்”

என விசிட்டிங் கார்டை கொடுத்து சென்றார், பிரபல நிதிநிறுவனர்.

“ஆசையா கேட்டப்போ எல்லாம் வாங்கிக் கொடுத்தது எதுக்கு’னு இப்ப புரியுதுங்க” அடகுக்கடையில் கணவரிடம் நகைகளை கழட்டிக் கொடுத்த மனைவி.

ஏஐயில் உருவான மறைந்த பிரபல நடிகர் நடித்த படத்தை முதல் காட்சியில் ஜோராக கைத்தட்டி, விசிலடித்து பார்த்து ரசித்தான், மறைந்த ரசிகர்.
# அறந்தாங்கி ப.காளிதாசன்

வறுமை ஒழிப்பை பற்றிய பேச்சுக்கு வாங்கிய பணத்தில்...
வீட்டிற்கு ”அன்றைய சாப்பாடு’ வாங்கிச் சென்றார் பேச்சாளர்!!

பைக்கில் வேகமாக சென்ற மதன் எதிரே வந்த ஆட்டுக்குட்டியின் மேல் மோதாமல்

இருப்பதற்காக வண்டியை வேறு பக்கம் திருப்பி லாரி மீது மோதி ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்ட அவனுக்கு, ஏதும் நடக்காமல் இருக்கனும் ஆண்டவா உனக்கு “கிடாவெட்டி” பொங்க வைக்கிறேன்!” என கடவுளிடம் நேர்ந்து கொண்டாள் மதனின் அம்மா!!

தமிழ் மொழியைப் பற்றி வீர தீர வசனம் பேசிய முகுந்தன் வந்த போன் காலை அட்டென்ட் செய்தார் ‘ஹலோ’ என்று!!

“நீ எனக்கு தாயும் இல்ல, நான் உனக்கு பிள்ளையும் இல்லை!” என கோபமாக பேசிய சந்துரு தும்மினான் “அம்மா” என்று!

பரபரப்பான சாலையில் அடித்துப் பிடித்து சரியான முகூர்த்தத்திற்கு மண்டபம் சென்ற சந்துரு, திருமணத்தை மாப்பிள்ளையின் நண்பன் போட்ட ஸ்டேட்டஸில் பார்த்தான்!!

# 69. திருப்பூர் வைகை.

## ஆறுமுகம்

மனசு சரியில்லாததால் கோயிலுக்கு சென்று வேண்டிக் கொண்டு வந்தாள் மன நல மருத்துவர் ராஜலட்சுமி .....

தனது எதிர்காலம் குறித்த குறித்த தெளிவு இல்லாமல் குழம்பிப் போய் பயத்தோடு வாழ்ந்தாள் ஜோதிட திலகம் லலிதா ...

எல்லாப் பிரச்சினைக்கும் தீர்வு சொல்லப்படும் என்று எழுதப்பட்டிருந்த போர்டில் எழுத்துப் பிழைகள் காணப்பட்டது.

புரட்டாசி வரப்போவதால் ஆவணி மாதம் முழுவதும் அசைவமாய் சமைத்து சாப்பிட்டாள் புரட்டாசி விரதம் கடைப்பிடிக்கும் மேகலா ...

வங்கியில் கல்விக்கடன் பெற்று

படித்த லக்ஷனாவால் கடைசி வரை முடித்திடவேயில்லை கல்விக் கடனை.

## 70. திருமயம் பெ.பாண்டியன்

பாழடைந்த கோவில். பக்தர்கள் யாரும் வரலையே என கவலைப்பட்ட கடவுளைத் தேடி வந்தான்... சிலை திருடன்!

பக்தர்கள் கூட்டம் தினமும் பெருகுவதை பார்த்து நிம்மதி இழந்த கடவுள் ஓய்வு தேடி இமயமலைக்கு ஓடினார்!

கல்வி கட்டணம் அதிகம் வாங்கும் பள்ளியில் குறைந்த சம்பளமே வாங்கினார் ஆசிரியர்.

பேய்கள் பயந்தன..மயானத்திற்கு அருகில் வீடுகள் வந்ததும்!

கல்லூரி படிப்பை முடித்து வெளியே வந்தவன் கூலி வேலைக்கு போனான்!

# கணியம் அறக்கட்டளை

### தொலை நோக்கு – Vision

தமிழ் மொழி மற்றும் இனக்குழுக்கள் சார்ந்த மெய்நிகர்வளங்கள், கருவிகள் மற்றும் அறிவுத்தொகுதிகள், அனைவருக்கும் கட்டற்ற அணுக்கத்தில் கிடைக்கும் சூழலை உருவாக்குதல்.

### பணி இலக்கு – Mission

அறிவியல் மற்றும் சமூகப் பொருளாதார வளர்ச்சிக்கு ஒப்ப, தமிழ் மொழியின் பயன்பாடு வளர்வதை உறுதிப்படுத்துவதும்,

அனைத்து அறிவுத் தொகுதிகளும், வளங்களும் கட்டற்ற அணுக்கத்தில் அனைவருக்கும் கிடைக்கச்செய்தலும்.

**எமது பணிகள்**

- **கணியம் மின்னிதழ்** kaniyam.com
- கணிப்பொறி சார்ந்த கட்டுரைகள், காணொளிகள், மின்னூல்களை இங்கு வெளியிடுகிறோம்.
- **கட்டற்ற தமிழ் நூல்கள்** FreeTamilEbooks.com
- இங்கு யாவரும் எங்கும் பகிரும் வகையில், கிரியேட்டிவ் காமன்ஸ் உரிமையில், தமிழ் மின்னூல்களை இலவசமாக, அனைத்துக் கருவிகளிலும் படிக்கும் வகையில் epub, mobi, A4 PDF, 6 inch PDF வடிவங்களில் வெளியிடுகிறோம்.

- தமிழுக்கான கட்டற்ற மென்பொருட்கள் உருவாக்கம்
- தமிழ் ஒலியோடைகள் உருவாக்கி வெளியிடுதல்
- விக்கி மூலத்தில் உள்ள மின்னூல்களை பகுதிநேர/முழு நேரப் பணியாளர்கள் மூலம் விரைந்து பிழை திருத்துதல்
- OpenStreetMap.org ல் உள்ள இடம், தெரு, ஊர் பெயர்களை தமிழாக்கம் செய்தல்.

மேற்கண்ட திட்டங்கள், மென்பொருட்களை உருவாக்கி செயல்படுத்த உங்கள் அனைவரின் ஆதரவும் தேவை. உங்களால் எவ்வாறேனும் பங்களிக்க இயலும் எனில் உங்கள் விவரங்களை kaniyamfoundation@gmail.com க்கு மின்னஞ்சல் அனுப்புங்கள்.

### வெளிப்படைத்தன்மை

கணியம் அறக்கட்டளையின் செயல்கள், திட்டங்கள், மென்பொருட்கள் யாவும் அனைவருக்கும் பொதுவானதாகவும், முழுமையான வெளிப்படைத்தன்மையுடனும் இருக்கும். https://github.com/KaniyamFoundation/Organization/issues இந்த இணைப்பில் செயல்களையும், https://github.com/KaniyamFoundation/Organization/wiki இந்த இணைப்பில் மாத அறிக்கை, வரவு செலவு விவரங்களுடனும் காணலாம்.

கணியம் அறக்கட்டளையில் உருவாக்கப்படும் மென்பொருட்கள் யாவும் கட்டற்ற மென்பொருட்களாக மூல நிரலுடன், GNU GPL, Apache, BSD, MIT, Mozilla ஆகிய உரிமைகளில் ஒன்றாக வெளியிடப்படும். உருவாக்கப்படும் பிற வளங்கள், புகைப்படங்கள், ஒலிக்கோப்புகள், காணொளிகள், மின்னூல்கள், கட்டுரைகள்

யாவும் யாவரும் பகிரும், பயன்படுத்தும் வகையில் கிரியேட்டிவ் காமன்சு உரிமையில் இருக்கும்.

**நன்கொடை**

உங்கள் நன்கொடைகள் தமிழுக்கான கட்டற்ற வளங்களை உருவாக்கும் செயல்களை சிறந்த வகையில் விரைந்து செய்ய ஊக்குவிக்கும்.

பின்வரும் வங்கிக் கணக்கில் உங்கள் நன்கொடைகளை அனுப்பி, உடனே விவரங்களை kaniyamfoundation@gmail.com க்கு மின்னஞ்சல் அனுப்புங்கள்.

**Kaniyam Foundation**

**Account Number : 606 1010 100 502 79**

**Union Bank Of India**

**West Tambaram, Chennai**

IFSC – UBIN0560618

Account Type : Current Account